மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 1 / ஜனவரி 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## புத்தகங்களுக்கு 75 இலட்சம்

### தமிழக முதல்வர் அறிவிப்பு



பாடகர் **முகேஷ்** நேர்காணல்

"ஒரு இமயமலை இன்னொரு இமயமலையிடம் எனக்காக வாய்ப்புக் கேட்டது நான் இறக்கையில்லாமலே வானத்தில் பறந்தேன்


பன்மை வெளி
விலை 150/-
98408 48594
panmaiveli.com
திராவிடம்
தமிழர் மறுமலர்ச்சியை
வளர்த்ததா? வழிமாற்றியதா?
பெ. மணியரசன்

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly January 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
செய்தி ஆசிரியர்
**ம. வில்லியம் எபனேசர்**
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**ஜெயவேல்**
**அருண் ஹென்றிக்ஸ்** கோவை
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**அரவிந்த்**
**முருகன் தேவேந்திரன்**

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

புத்தகங்களுக்கு 75 இலட்சம்
தமிழக முதல்வர் அறிவிப்பு (தலையங்கம்)........ 4

பேரறிஞர் அண்ணாவின் திருவாய்ப் பூக்கள்........ 5

பாடகர் முகேஷ் நேர்காணல்........ 8

ஆஸ்திரேலியா காட்டுத் தீ
50 கோடி விலங்குகள் பலி........ 15

திருக்குறள் ஓர் இட்டளி........ 16

மாட்டுக்கறி........ 17

கீழடியும் நெடுநல்வாடையும்
முனைவர் க. மோகன்காந்தி........ 21

இஸ்லாமிய நாடுகள்........ 23

நம்பிக்கைகளின் எழுதுகோல்
நா. இராசாரகுநாதன்........ 24

வரலாறை மறப்பவர்களை
வரலாறு தண்டிக்கும்
தோழர் எம். ஸ்வராஜ் எம்.எல்.ஏ........ 25

தமிழ்நாட்டுக்கு குடிமக்கள்
பதிவேடு வேண்டும்........ 28

தமிழி என்பதோ தாமிழி என்பதோ சரியல்ல
பண்டைத் தமிழ் எழுத்து என்பதே சரியானது
- நடன காசிநாதன்........ 31

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# புத்தகங்களுக்கு எழுபத்தைந்து இலட்சம் முதலமைச்சர்

மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் தலையானது புத்தகம் என்ற கண்டுபிடிப்பு. புத்தகங்கள், அறிவையும் செய்திகளையும் தலைமுறைகளுக்கு கொண்டு செல்லக்கூடிய மிகப்பெரிய அறிவுப் புதையல். புத்தகங்கள் மூலமாக அறிந்து கொள்வது மட்டுமல்ல, புதியவைகளை கண்டுபிடிப்பதற்கான தூண்டு கோலாகவும், நாகரிகத்தை மேம் படுத்துகிற கருவியாகவும் இருக்கிறது என்பதை யாராலும் மறுத்திடல் இயலாது.

கதை, நாவல் புத்தகங்கள் என்று எடுத்துக் கொண்டால், புத்தகத்தில் இருக்கிற வரிகளுக்கு, நமது கற்பனைகளால் நாமே காட்சிகளை அமைத்து சுவைத்துப் பார்க்கிற வாய்ப்பைத் தருபவை புத்தகங்களே. அறிவியல் உலகில் புத்தகங்கள் வாசிப்பு குறைந்து வருகிறது என்று அறிஞர்கள் கவலையுற்ற நேரத்தில், புத்தகங் களின் விற்பனை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்று, வாசிப்பாளர்களின் எண்ணிக் கையும் அதிகரித்திருப்பது எல்லோருக்கு மான மகிழ்ச்சி.


ஆண்டுதோறும் பபாசி நடத்தும் புத்தகக் காட்சி, இந்த ஆண்டும் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. வளாகத்தில் நடக்கிறது. இது 43வது காட்சியாகும். சமார் 800 விற்பனை அரங்குகள் இடம் பெற்றிருக்கின்றன. வரவேற்பு சிறப்பாக இருக்கும் என்பதே அனைவரின் கருத்தாக இருக்கிறது.

முதலமைச்சர் மாண்புமிகு பழனிச்சாமி அவர்கள் திறந்து வைத்திருக்கிறார். திறந்து வைத்தது மட்டு மல்லாமல், அடுத்த ஆண்டு முதல் இன்னும் சிறப்பாக இந்தப் புத்தகக் காட்சி நடைபெற வேண்டும் என்பதற்காக இனி வருகிற ஆண்டுகளில், ஆண்டுதோறும் இந்த புத்தகக் காட்சி நிகழ்வுக்காக ரூபாய் எழுபத் தைந்து இலட்சங்கள் அரசின் மூலமாகத் தரப்படும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் தரப்படுகிற விருது களை தகுதியானவர்களுக்கு தந்திருக்கிறார் முதலமைச்சர். சிறந்த பதிப்பாளருக்கான பதிப்பகச் செம்மல் க. கணபதி விருது, அரு.லெட்சுமணன் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார். சிறந்த புத்தகவிற்பனையாளருக்கான பதிப்பகச் செம்மல் ச.மெய்யப்பன் விருது, அருணாசலத்துக்கும் சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது, பொற்கோ அவர்களுக்கும் சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு முத்து விருது, என்.எஸ். சிதம்பரத்துக்கும் வழங்கியிருக்கிறார். பபாசியின் சிறந்த பதிப்பாளருக்கான விருது, ராமலெட்சுமணனுக்கும் சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தை கவிஞர் அழ வள்ளி யப்பா விருது, செ.சுகுமாரனுக்கும் சிறந்த பெண் எழுத்தாளருக் கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது, ரமணிசந்திரனுக்கும் வழங்கி சிறப்பித்திருக்கிறார் முதலமைச்சர்.

43வது புத்தகக் காட்சியில், கீழடி – ஈரடி தமிழ் தொன்மங்கள் என்னும் தலைப்பில் அமைக்கப்பட்டி ருக்கிற அரங்கம் மிகவும் சிறப்பாக இருக்கிறது. தொல்லியல்துறை ஆணையாளர் உதய சந்திரன் மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட இந்த அரங்கில், கீழடியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் குழாய், நீர் மேலாண்மைக் குரிய தடயங்கள், கருப்பு சிவப்பு குவளைகள், உறை கிணறு உள்ளிட்ட பொருட்களின் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ளன. வியந்து போற்றுகிற தமிழர் தொன்மமாக இக்காட்சி அரங்கம் விளங்குகிறது.

சென்னையில் நடக்கிற பபாசியின் 43வது காட்சி, தமிழர்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாய் இருக்கிறது.



உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன், வாழ்த்துக்குரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

தூய உள்ளமே கோயில், நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம். மக்கட்பணியே மகேசனுக்கு உகந்த வழிபாடு. ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்குத் தேர்த்திருவிழா!.

சுடப்பட்ட குதிரை இறந்த பிறகு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வர். ஆனால், நலிவடைந்த தொழிலாளி, மாள நேர்ந்தால் அவனுடைய குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி எற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனதோடு அவர்கள் வேலை செய்தால், தொழிலில் நேர்த்தியிருக்காது. தரம் இருக்காது. பயனும் கிடைக்காது.

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்ட மாக இருக்க வேண்டும்.

கிளி கொஞ்சிடும் சோலையானாலும் நடுநிசி வேளையில் ஆந்தையும் அலறத்தான் செய்யும்!

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறாதா? வாழ்க்கைக் குத் தேவையானதுதானா? அறிவுக்கு ஏற்றதா? என்று கவனத்துதான் நாம் பின்பற்ற வேண் டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற் காகவும் கண்ணை மூடிக் கொண்டு எதையும் அர்த்த மற்றும் பொருத்தமில்லாமலும் பின்பற்றக்கூடாது.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றிடும் நவீன கருவிகளைப் பற்றிக் கூறுகிறார்கள் அதையும் மனிதன்தான் செய்தான் என்பதை மறந்து விடலாகாது.



# பேரறிஞர் அண்ணாவின் திருவாய்ப் பூக்கள்!

கண்ணுக்கு மை இடுவது போல பிற மொழி களைப் பயன்படுத்த வேண்டும். மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ அதைப் போல பிறமொழிகளை அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

மற்றவர்கள் மட்டரகமாகத் திட்டினால் மனம் பதைக்கக்கூடாது. ஏனெனில் அந்தத் தூற்றல் வெறும் குப்பை. அந்தக் குப்பையும் நம் கழனியை வளமாக்கும் எருவாக மாறக் கூடும். நினைவிருக்கட்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டி, புத்துலகு அமைக்க வேண்டும் இளைஞர்கள்.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி, அவனது கண்களில் கண்ணீர், அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த இயந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெற முடியாது.

கண்முன் நடைபெறும் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டு பிடிக்கத் தெரியாத பருவம் குழந்தைகளுக்கு. ஆனாலும் குழந்தைகள் சிந்திக்காமல் இருப்பதில்லை.

மாலைக்கு மலர் தேவை. மலருக்கோ தோட்டம் தேவை. அதுபோலத்தான் அரசுக்கு அழகு தர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழவே சமதர்ம முறையில் அடைந்த வாழ்க்கைப் பாதை தேவை.

**மற்றவர்கள் மட்டரகமாகத் திட்டினால் மனம் பதைக்கக்கூடாது. ஏனெனில் அந்தத் தூற்றல் வெறும் குப்பை. அந்தக் குப்பையும் நம் கழனியை வளமாக்கும் எருவாக மாறக் கூடும். நினைவிருக்கட்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டி, புத்துலகு அமைக்க வேண்டும் இளைஞர்கள்.**

மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம். அதுபோலவே பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்டவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் அவர்கள் ஏற்றுக் கொள்வர்.

ஒரு பெரிய பாறாங்கல்லைவிட ஒரு சிறிய வைரக்கல் எப்படி மதிக்கப்படுகிறதோ, அப்படித்தான் இரண்டு அடிகளால் ஆன குறள் மதிக்கப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலே ஹைட்ரஜன் இல்லையே, அணுகுண்டு இல்லையே என்று சொல்வது பொருந்தாது. எழுதப்பட்ட காலத்தையும் முறையோடு ஒப்பு நோக்க வேண்டும்.

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து, இலக்கியம் வளர்ந்து அதை மக்கள் உணர்கின்ற நேரத்தில்தான் தோன்றும். அந்த நிலை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இருந்தது.

அழகிய ரோஜாவிற்கு அற்புதமான வண்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாம் அல்லவா? நம்மைச் சொக்க வைக்கும் மயிலின் தோகைக்கு பட்டாடை போர்த்தத் தேவையில்லை அல்லவா? முல்லைக்கு மணமும், தேனுக்கு இனிப்பும் நாம் கூட்டத் தேவையில்லை அல்லவா? அதே போலத்தான் நம் தாய்மொழி தமிழுக்கு பிறமொழி சேர்க்கையும் தேவையற்ற ஒன்று.


கதம்ப மாலையில் மலர் குறைவாகவும் தழை அதிகமாகவும் இருப்பின் அதை மாதர் கொள்ளார். அதுபோலவே மேடைப் பேச்சில் நல்ல கருத்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அருகி கவைக்கு தவாதவை அதிகமிருப்பின் அதனை எவரும் கொள்ளார்.

தீய நாற்றம் நறுமணத்தைவிட விரைவாகப் பரவுகிறது. கெட்ட வம்புப் பேச்சு, அதே போலத்தான் உண்மையைவிட வேகமாகப் பரவுகிறது.

காய்ச்சக் காய்ச்சத்தான் பால் சுவைக்கும். மணக்கும். பழைய இயல், பகுத்தறிவு இயலாக மாற்றப்பட நாம் நற்பணி புரிய வேண்டும்.

அழகு, களிப்பதற்கு எவ்வாறு உதவுகிறதோ, அதைப் போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது. எனவேதான் புலவர்கள் மாதர்களின் விழிகளிலே அமிர்தமும் உண்டு, நஞ்சும் உண்டு என்றனர்.

சீசரின் மனைவி குற்றங்குறைகளுக்கு அப்பாற் பட்டவளாக இருக்க வேண்டும் என்று சேக்சுபியர் கூறியுள்ளார். அதுபோல், பெரிய அரசை நடத்திச் செல்கிறவர்களும் எந்த விதமான குறைகளுக் கும் அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.



தமிழகத்திலே தமிழ் ஏற்றம் பெறுவது போல, அந்தந்த மாநிலங்களில் அங்கங்கே உள்ள மொழிகள் ஏற்றம் பெறுவதை நாம் வரவேற்கிறோம்.

மரபு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை மறதி என்று ஆகிவிட்டது. இது தவறு.

செல்வர்கள் இல்லங்களில் காணப்படும் சீரும் சிறப்பும்கூட காகிதப் பூக்கள்தான். காண்பதற்கு மட்டுமே காட்சி, மணம் இல்லை அங்கும்.

எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது, நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதையே காட்டுகிறது.

நல்லது செய்ய நினைத்திடும் யாரும் தங்கள் பாதையில் தட்டுப்படும் தடைக் கற்களை, மற்றவர்கள் நீக்கி உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

பாய்ந்தோடும் நீர் வெள்ளத்தைத் தேக்கிப் பாய்ச்சினால்தான் பலன் காண முடியும். காட்டாறு பயிரை வளர்க்காது. கட்டுப்பாடு இல்லாத வாழ்வும் அணைக்கட்டு இல்லாத வெள்ளமும் ஆபத்தே.

தமிழன் வாழ வேண்டிய நல்வாழ்வு, தன்னை மட்டும் வாழ்வித்துக் கொள்ளக் கூடியதல்ல. தமிழன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பது, மற்றவர்களை வாழ வைக்க வேண்டும் என்பதுதான்.

மாணவர்கள், பகுத்தறிவுவாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக இருக்க வேண்டும்.

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள், மதிக்கத்தக்கது. எனினும் அதற்காக மொழித் துறையிலோ பொருளாதாரத் துறையிலோ அநீதியையும் ஆதிக்கத்தையும் சகித்துக் கொள்ள முடியுமோ? அடிப்படை பலவீனமாக இருந்தால் மகுடமும் இருளில் வீழும்.

சாதாரண மனிதனை, கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன்தான் இந்த நாட்டின், பிற நாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன்.

ஒற்றுமை என்பது இரத்தத்தில் ஊறியது. சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சேர்ந்தே இருப்பது. உள்ளத்தால் உண்மையென்று மெய்ப்பித்துக் காட்டக் கூடியது.

நமக்குப் புத்தகங்கள் வாங்குகிற பழக்கம் ஏற்பட வேண்டும். அப்போதுதான் புதிய புத்தகங்கள் வெளிவரும்.

தமிழ்ப் பண்பாட்டை இழந்து, தேசிய ஒருமைப் பாட்டை அமைக்க விரும்பினால், ண்ணிரண்டையும் விற்று சித்திரம் வாங்கியதாகத்தான் இருக்கும்.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறப்பது என்பதல்ல. போலித்தனமான எண்ணங்களையும் செயல்களையும் அழித்தொழிப்பததான் பகுத்தறிவு வாதம்.

தமிழ் தேவையில்லை. தமிழ் அரியணை ஏறக் கூடாது என்று கூறுபவர்கள் இந்த நாட்டில் இருக்க வேண்டியவர்களா என்ற சந்தேகம் எனக்குண்டு.

பெருந்தன்மையோடு கூடிய பொது வாழ்வு, வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை... இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ, நமது உடைமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டபின், விட்டு வைத் திடாமல் அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

உழைப்பே செல்வம், உழைப்பவர்க்கே உரிமை, உழைப்பாளிக்கே உலகம் உரியது.

கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திட மனம் இல்லையென்றால், கடமையை நிறைவேற்ற முடியாது.

திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம். அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப் பித்துக் காட்ட வேண்டும்.

ஆட்டுக்குட்டியைத் தின்று விட்ட ஓநாய், “என்னோடு ஒன்றாக ஆடு இணைந்துவிட்டது. நாங்கள் இணைபிரியாச் சகோதரர் ஆகிவிட்டோம்“ என்று கூறுவது போன்ற முறையில் ‘ஒற்றுமை’ வேண்டுவோர் நடந்திடக் கூடாது. ●

# “ஒரு இமயமலை இன்னொரு இமயமலையிடம் எனக்காக வாய்ப்புக் கேட்டது நான் இறக்கையில்லாமலே வானத்தில் பறந்தேன்”


இளைய தலைமுறைப் பாடகர்களில் மிகச்சிறந்த பாடகராக திகழும் பின்னணிப் பாடகர் திரு. முகேஷ் அவர்களுடன் ஒரு சந்திப்பு.

*கேள்வி:* **திரைப்படத்துறையில் உங்களை அறியாதவர் இல்லை என்ற உயர்நிலைக்கு வந்திருக் கிறீர்கள் வாழ்த்துகள். உங்களைப் பிறப்பித்த மண் ணைப் பற்றிக் கூறுங்கள்.**

*நான் பிறந்தது சென்னை. எனது தாய் தந்தை பிறந்த மண் திருநெல்வேலிச் சீமை.*

*கேள்வி:* **உங்கள் இசைப்பயணத்தின் தொடக்கம் பற்றி?**

*எங்கள் அப்பா ஒரு இசைக்கலைஞர். அவர்கள் மேடைக் கச்சேரிகளில் பேங்கோசு, தாள வாத்தியங்கள் வாசிப்பார்கள். ‘பார்த்த ஞாபகம் இல்லையோ’ ‘ஒரு பெண்ணைப் பார்த்து’ போன்ற பாடல்களில் பாங்கோசு இசைக்கருவி முக்கியப் பங்கு வகிக்கும். இதைக் கடந்து, எங்கள் அப்பா அம்மாவிற்கு இறையருளால் இசை ஞானம் உண்டு. இரண்டு பேரும் பாடுவார்கள். தொழில் முறைப் பாடகர்களாக இல்லையென்றாலும் பாடும் ஞானம் அவர்களுக்கு உண்டு. அந்த வழியில் இந்த இசை அறிவு எனக்கும் என் அண்ணனுக்கும் இறைவன் யாசகமாய்க் கொடுத்திருக்கிறார் என்றே நினைக்கிறேன். என் அண்ண னுக்கு இசைத்துறையில் ஆர்வம் இல்லை. எனக்கு இசைத் துறையில் இருந்த ஆர்வத்தை என் அப்பா கண்டறிந்து, என்னை இசைத்துறைக்குக் கொண்டு வந்தார்கள்.*



*கேள்வி:* **நீங்கள் முதலில் பாடியது எங்கே?**

*நான் முதலில் பாட ஆரம்பித்தது ஒரு ஐயப்ப பூசையில். நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஐயப்ப பக்தர்கள் வீட்டில் பூசை நடத்துவார்கள். அதில் பாடல்கள் பாடுவார்கள். அம்மாதிரி யான இடங்களின் என் அப்பா வாசிப்பார்கள், அவர்கள்தான் ஒரு ஐயப்ப பூசையில் என்னைப் பாட வைத்தார்கள்.*

*தமிழிசையால் உலகத்தை ஆண்டவர் கள் என்று போற்றப்படக்கூடிய சீர்காழி கோவிந்தராசன், டி.எம்.சௌந்தராசன், மதுரை சோமு போன்றோரின் பாடல்களை நான் பாடினேன். இந்தப் பாடல்களைப் பாடியதால் இசையோடு, தமிழில் எப்படிப் பேச வேண்டும் பாட வேண்டும் என்பதையும் இசை மேதைகள் மூலமாகத்தான் நான் கற்றுக் கொண்டேன். தமிழை*



பாட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா, இன்று நாம் ஒரு கச்சேரிக்குப் போகிறோம் என்றார். யாருடைய கச்சேரி என்று கூட நான் கேட்கவில்லை.

ஆனால், முதல் கச்சேரியே சென்னை கோடம் பாக்கத்தில் உள்ள புலியூரில். மிகப்பெரிய பாடகர், அவர்போல் யாராலும் பாட இயலாது என்று பெயர் பெற்றவர், ஆடி மாதத்தில் அவர் குரல் தமிழகம் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும். மிகச்சிறந்த பாடகர் கலைமாமணி. எல். ஆர். ஈசுவரி அம்மா அவர்களது கச்சேரியில் பாடினேன். இரவு 10 மணிக்கு கச்சேரி தொடங்கியது. ஈசுவரி அம்மா பட்டுப் புடவையில் தங்க நகைகள் அணிந்து பக்தி மயமாக மேடைக்கு வந்தார்கள். அந்த மேடை முழுவதும் அவர்கள் மட்டுமே இருப்பது போல் எனக்குத் தோன்றியது. அப்படிப்பட்ட ஒரு தோற்றம், கம்பீரம். அவர்களிடம் என் குருநாதர் கீபோர்ட் வாசித்தார்கள். எனக்கு அந்த மேடையில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது.

எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை மேற்கூறிய பாடகர்களின் பாடல்கள் மூலம்தான் அறிந்து கொண் டேன்.

எனது இந்த வளர்ச்சிக்குக் காரணம், இசை மட்டுமல்ல என் தாய்மொழி தமிழும்தான் என்பதே உண்மை. அதற்காக என் தாய்மொழிக்கு பெரிய நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

கேள்வி: **இசையை முறைப்படி கற்றுக் கொண்டீர்களா? யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்?**

என் தந்தையாரின் நெருங்கிய நண்பரும் இசைக் குழுவில் கீபோர்ட் வாசித்தவருமான திரு. எ.சி. தினகரன் அவர்கள்தான் எனது குருநாதர். அவர்கள் தான் எனக்கு ஆர்மோனியம் கற்றுக் கொடுத்தார்கள். என் குருநாதர் மூலமாகத்தான் திரைப்படப் பாடல்களை கச்சேரிகளில் பாடினேன்.

நான் ஆர்மோனியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என் குருநாதரிடம் அப்பா சேர்த்து விட்டார்கள். அப்படிச் சேர்த்து விடும்போது, குரு நாதரிடம் என் மகன் பாடுவான், அவனுக்கு வாய்ப்புக் கொடு என்று கூறினார்கள்.

திரு. எ.சி.தினகரன் அவர்கள் என்னைப் பார்த்து, “ஏதாவது ஒரு பாடல் பாடு“ என்றார். நான் பாடினேன். அவருக்கு ரொம்ப பிடித்துப் போய்விட்டது. நல்லா பாடுகிறான். நான் பார்த்தக் கொள்கிறேன் என்றார்.

ஒருநாள் நான் ஆர்மோனியம் வகுப்புக்குச் சென்றேன். என் குருநாதர் திடீரென்று நீ போய்

அந்த மேடையில் பழம் நீயப்பா என்ற கே.பி.சுந்தராம்பாள் அவர்கள் பாடிய பாடலைப் பாடினேன். அப்போது எனக்கு வயது பதினான்கு இருக்கும். இந்தப்பாடலை பாடி முடித்ததும் ஈசுவரி அம்மா அவர்கள் என்னைப் பார்த்துச் சொன்னார்கள் “தம்பி இந்தப் பாட்டைப் பாடுவது ரொம்ப கடினம். நீ எப்படி இந்தப்பாடலைத் தேர்ந்தெடுத்தே என்று கேட்டார்கள். “எங்க அப்பாதான் இந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தாங்க“ என்றேன். “உண்மையிலேயே இந்துப் பாடலெல்லாம் பாடுறது பெரிய விசயம்ப்பா. இறையருள் உனக்கு ரொம்ப இருக்கு. என்னுடைய அம்மன் உன்னய காப்பாத்துவா என்று சொல்லி எனக்கு ஆசி வழங்கினார்கள். மிகப்பெரிய ஒரு பாடகரின் ஆசீர்வாதத்தோட இந்தத் துறையில் நான் காலடி எடுத்து வைத்தேன்.

என் குருநாதரைப் பற்றி நிறையச் சொல்லலாம். உதவாத கல்லைக்கூட சிற்பமாக மாற்றக் கூடியவர். ஒன்றுமே தெரியாமல் இருந்த என்னை, பாடகனாக ஆக்கியவர். சுருதி என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் அவர்தான் சொல்லித் தந்தார். பாட்டின் உயிர் என்பது எது, யாரெல்லாம் எப்படி உயிர் கொடுத்துப் பாடியிருக்கிறார்கள் என்று கூறி, சீர்காழி கோவிந்தராஜன், டி.எம்.சௌந்தராசன், திருச்சி லோகநாதன் போன்ற பெரியவர்களின் பாடல்களைச் சுட்டிக் காட்டி எனக்கு புரிய வைப்பார்.

எனக்கு ஒரு பாடல் புரியவில்லை என்றாலும், சங்கதி புரியவில்லை என்றாலும் நான் அவரிடம்




கேட்பேன். அதற்கு அவர், ஒரு பழைய பாடலை மாதிரியாகக் காண்பித்து, "அந்த சங்கதியையே நீ பாடுறே, அதவிட இது எளிதான சங்கதிதான்" என்று கூறி ஊக்கமளிப்பார். அவர் விரும்பும் சங்கதியை என்னிடமிருந்து வரவைத்து விடுவார். கடினமாக பாடலாக இருந்தாலும் அதை எனக்குப் புரிய வைத்து, என்னைப் பாட வைத்து விடுவார். என்னைப் போல நிறைய பாடகர்கள் அவரிடம் போய் நன்றாகத் தயாராகியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர் இசைத்திறமை கொண்டவர் என் குருநாதர் எ.சி. தினகரன் அவர்கள். எனது குருநாதர் அயனாவரத்தில் இருக்கிறார். அவரால் இன்று எத்தனையோ பேர் இசைத்துறையில் உயர்ந்திருக் கிறார்கள். அதில் நானும் ஒருவன். இந்த நேரத்தில் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

என் குருநாதர் யாருக்கும் அஞ்சமாட்டார். அது எவ்வளவு பெரிய இசையமைப்பாளராக இருந்தாலும், பெரிய பாடகர்களாக இருந்தாலும்சரி யாருக்கும் பயப்பட மாட்டார். அவருடைய வேலையில் அவர் சரியாக இருப்பார். நாம் நம் வேலையில் சரியாக இருக்கிறோம் என்ற தன்னம்பிக்கை உடையவர். அவரிடம் இன்னொரு சிறப்பு என்னவென்றால், அவரது இசையமைப்பில் பாடும்போது ஏதாவது ஒரு சங்கதி பாட இயலவில்லை என்று கூறினால், நமக்கேற்றாற்போல் சங்கதியை மாற்றித் தருவார். இது அவரிடம் உள்ள பெருஞ்சிறப்பு.

கேள்வி: **உங்களது முதல் ஒலிப்பதிவு பற்றிக் கூறுங்கள்?**

நான் முதன்முதலில் ஒலிப்பவுக்கூடத்தில் பாடியது எனது குருநாதர் எ.சி.தினகரன் அவர்களது இசை அமைப்பில்தான். ஒரு நாள் "கம்போசிங் என்றால் என்ன?" என்று கேட்டார். நான் "தெரியாது" என்றேன். கவிஞர் பாடல் வரிகளைத் தருவார், இசையமைப்பாளர் அதற்கு மெட்டமைப்பார், அல்லது இசையமைப்பாளர் மெட்டு அமைப்பார் அதற் கேற்றவாறு கவிஞர்கள் பாடல் எழுதித் தருவார்கள் இது தான் கம்போசிங் என்று எளிதாகச் சொன்னார். நாளை மெட்டா ஒலிப்பதிவுக்கூடத்திற்கு வா, அதைப்பற்றி எல்லாம் தெரிந்து கொள் என்றார். நானும் சென்றேன்.

ஆர்மோனியப் பெட்டியை எடுத்து வைத்தார். பாடல் வரிகள் வந்தது. வரிகளைப் பார்த்து விட்டு, அவரிடம் தபலா வாசிக்கும் சாமிநாதன் அவர்களை வாசிக்கச் சொன்னார், உடனே மெட்டுப் போட்டு விட்டார். எனக்கு ஒரே வியப்பு. பாடல் வரிகளைப் பார்த்ததும் மெட்டுப் போட்டுவிட்டாரே என்று. இதெல்லாம் எனக்குப் புதிது. அவர் சாதாரணமாகப் பாடினார். என்னைப் பார்த்து "இந்தப் பாடலை நீ பாடு" என்றார். அதன்பிறகு இன்னொரு பாடலுக்கு மெட்டமைத்தார். "இந்தப் பாடலை தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் பாடப்போகிறார் அவருக் கேற்றாற்போல் மெட்டமையுங்கள்" என்று இரத்தினம் என்ற அண்ணன் கூறினார். அப்படியே தேவா சார் பாடுவது போல் மெட்டமைத்தார். எனக்கு பெரிய வியப்பு.

"இந்தப் பாடலை நீ ட்ராக் பாடு, தேவா அண்ணன் பாடுவது போல் பாடு" என்று எனக்குச் சொல்லிக் கொடுத்தார். நானும் பாடினேன். அடுத்தநாள் அந்தப் பாடலைப் பாடுவதற்கு தேனிசைத் தென்றால் தேவா அவர்கள் வந்தார்கள். பாடலைக் கேட்ட தேவா அவர்கள் "என்னைப் போல் பாடியிருக்கிறாரே யார் பாடியது" என்றார். எனது குருநாதர் திரு. தேவா அவர்களிடம், இவன்தான் பாடினான், எனது மாணவன், கச்சேரிகளில் எல்லாம் பாடுகிறான் என்று கூறி அறிமுகம் செய்து வைத்தார். "நன்றாக பாடியி ருக்கிறீர்கள். நல்லா வருவார்" என்று கூறி என்னை ஆசீர்வதித்தார்.

எனக்கு ரெக்கார்டிங் தியேட்டர், வாய்சு பூத், கண்ட்ரோல் ரூம் என்று எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தவர் என் குருநாதர்தான்.

கேள்வி: **திரைப்படத்தில் பாடுவதற்கு வாய்ப்பு எப்படி உங்களுக்குக் கிடைத்தது?**

எனக்கு பதினேழு வயதிருக்கும். நான் இசை நிகழ்ச்சிகளில் பாடி வந்தேன். ராஜ் தொலைக்காட் சியில் ராஜ கீதம் என்ற ஒரு இசை நிகழ்ச்சி நடந்து வந்தது. சன் தொலைக்காட்சியில் சப்தசுவரம் என்ற இசை நிகழ்ச்சி நடந்து வந்தது. இவை இரண்டுதான்

அப்போது தொலைக்காட்சிகளில் வந்த இசை நிகழ்ச்சிகள். என் தந்தையார் ராஜ் டிவி இசை நிகழ்ச்சியில் கலந்து கொள் என்றார். நான் அப்பாவிடம், "எனக்கு பயமாக இரக்கிறது மேடை களில் ஏதோ பாடிவிடுகிறேன். இது போட்டி" என்று தயங்கினேன். "இல்ல, இல்ல, நீ பாடுறே, நீ பாடுற பாட்டெல்லாம் மக்களுக்குப் பிடிக்கும் பாடு" என்று என்னை ஊக்கப்படுத்தினார்கள். "பார்வையாளர்கள் தான் ஓட்டுப் போடுவார்களாம் எனக்கு பயமாக இருக்கிறது" என்றேன். நீ முயற்சி செய், நிகழ்ச்சியில் வாசிக்கிறவங்க எல்லாம் நம்ம நண்பர்கள்தானே" என்று கூறினார்கள். நானும் ராஜ் தொலைக்காட்சியில் வாய்ப்புக் கேட்டேன்.

அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டி ருந்தவர், உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் அமீது அவர்கள். அவரிடம் ஆடிசன் போகும்போது, நான் "வசந்த முல்லை" என்ற பாடலைப் பாடினேன். "குரல் நல்லா இருக்கு, வேற ஏதாவது பாடுங்கள்" என்றார். "பாடுவோர் பாடினால் ஆடத்தோன்றும்" என்ற பாடலைப் பாடினேன். "வேற ஏதாவது பாடல் பாடுங்கள்" என்றார். "அம்மம்மா தம்பி என்று நம்பி" என்ற பாடலைப் பாடினேன். "நல்லாயிருக்கு இதுல எந்தப் பாட்டை செலக்ட் பண்றதுன்னு தெரியலையே, சரி நீங்க எந்தப் பாடலைப் பாட ஆசைப்படுறீங்க" என்று கேட்டார்.

"ஐயா நான் வசந்த முல்லை பாடலை பாடட்டுமா" என்று கேட்டேன். சரி பாடுங்கள் என்றார். நான் அந்தப் பாடலின் ராகத்தில் பத்துப் பாடல்களைக் கலந்து பாடுவேன். இது நானாக கற்றுக் கொண்டத தல்ல. நான் ஒரு இசைக்குழுவில் நிரந்தரமாக பாடிக் கொண்டிருந்த காலகட்டத்தில், அம்மன் பாடல்கள் பாடுவதில் புகழ்பெற்ற என்னுடைய நண்பர் கருமாரி கர்ணா அவர்கள் மேடைகளில் பாடும்போது இந்தப்




பாடலின் ராகமான சாருகேசியில் பத்துப் பாடல் களைக் கலந்து பாடுவார். இந்தப் பாடல்கள் எல்லாம் அந்த ராகம் என்றுகூட எனக்குத் தெரியாது. அவரைப் பின்பற்றி அந்த நிகழ்ச்சியில் பாடினேன். 'மன்மத லீலையை வென்றார் உண்டோ', 'ஆடல் கலையே தேவன் தந்தது', 'வரச்சொல்லடி என் வாயூர ஒரு முத்தம்' இப்படி தொடர்ந்து அதே ராகத்தில் பழைய பாடல்களைப் பாடினேன். நான் ஒவ்வொரு பாடல் பாடியபோதும் பார்வையாளர்கள் கைதட்டினார்கள். பாடி முடித்ததும் திரு. அப்துல் அமீது அவர்கள் "சாருகேசியில் ஒரு மாலையே தொடுத்துவிட்டார் முகேஷ்" என்று பாராட்டினார், இறைவன் உங்களுக்கு நல்ல குரல்வளத்தை தந்திருக்கிறான் என்று கூறி வாழ்த்தினார்.

அந்தப் போட்டியில் நிறையச் சுற்றுகள் இருக்கும். அடுத்த சுற்றில் 'மருதமலை மாமணியே' அதற்கடுத்த சுற்றில் 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது' நான் காவது சுற்றில் 'இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை' போன்ற பாடல்களைப் பாடினேன். இறுதிச் சுற்றுக்கும் வந்துவிட்டேன். இறுதிச்சுற்றுக்கு முன்னால் திரு. அப்துல் அமீது ஐயா அவர்கள் என்னிடம் "உங்களை ஒரு முக்கியமானவரிடத்தில் அறிமுகப்படுத்துகிறேன்" அவர் யார் என்று இப்பொழுது சொல்ல மாட்டேன்" என்றார்.

அங்கே இருந்த இசைக்கலைஞர்கள், ஐயாவிற்கு இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் அவர்களுடன் நெருக்க மான தொடர்பு உண்டு. ஒருவேளை அவராகக்கூட இருக்கலாம் என்றார்கள். இறுதிச் சுற்றில் நான் பாட வந்தபோது, அப்துல் அமீது ஐயா அவர்கள், எல்லா பாடகர்களையும் பார்த்து, "இந்தச் சுற்றில் கண்டிப்பாக நீங்கள் வெற்றி பெற வேண்டும். எல்லோரும் போட்டி போடுங்கள். உங்களிடம் பொறாமை இருக்கக்கூடாது. இந்த இறுதிச் சுற்றில் உங்களை வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப் போகிறவர்கள் மக்கள் அல்ல. மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விசுவநாதன் அவர்கள்" என்று கூறினார். எனக்குப் பயம். அப்போதுதான் அவரை நேரில் பார்க்கப் போகிறேன். அவர் மட்டுமல்ல, திரு. சங்கர்கணேஷ், திரு.எஸ்.பி.பால சுப்ரமணியம், திரு.ராஜ்குமார், திரு.பரத்வாச், திருமதி.சுஜாதா போன்றோரும் வருகிறார்கள் என்றார்கள். எனக்கு ஒரே பதட்டம். இவர்கள் எல்லோரையும் இப்போதுதான் முதன்முதலாகப் பார்க்கப் போகிறேன், அவர்கள் முன்பாகப் பாடப் போகிறேன் என்ற பயம். சரி இறைவன் விட்ட வழி என்று 'பாட்டும் நானே பாவமும் நானே' என்ற பாடலைப் பாடினேன்.

"நான் உண்மையைச் சொல்லுகிறேன், பள்ளியில் படிக்கும்போது ஒரு முறைகூட நூற்றுக்குநூறு மதிப்பெண் வாங்கியதில்லை. ஆனால், மெல்லிசை

மன்னர் அவர்கள் எனக்கு நூறு மதிப்பெண் கொடுத்தார்கள். அதோடு மட்டுமல்ல, எனக்கு விருதும் அவரே கொடுத்தார். நான் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டேன். இது நடந்தத 2002ஆம் ஆண்டு.

வெற்றி பெற்றவருக்கு பரிசு அறிவித்தார்கள். அந்தப் பரிசு என்னவென்றால் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் அவர்கள் இசையமைப்பில் பாடும் வாய்ப்பு என்பதுதான் அந்த அறிவிப்பு. என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் எனக்கு வாழ்த்துக் கூறினார்கள். மறுநாளும் வாழ்த்துகள் தொடர்ந்தன. திடீரென்று ஒரு போன் வந்தது. "நான் பி.எச்.அப்துல் ஹமீது பேசுகிறேன், எங்கே இருக்கீங்க?" என்று கேட்டார். வீட்டில் என்றேன். உடனே புறப்பட்டு இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் அவர்களது ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வாருங்கள் என்றார்.

மாலை ஐந்து மணி இருக்கும், என்னை வரவேற் பறையில் உட்காரச் சொன்னார்கள். அப்போது ஒருவர் வந்து "நீங்கதான் முகேசா" என்றார். நான் திரும்பினேன் ரகுமான் சார். ஆம் என்றேன். "அப்துல் ஹமீது சொன்னார் நீங்கதானா அது? உள்ள வரீங்களா?" என்றார். எனக்கு ஒரே நடுக்கம். அவரையும் அப்போதுதான் முதன் முறையாகப் பார்க்கிறேன், அதுவும் மிக அருகாமையில். உள்ளே போனதும் "என்ன பாட்டுப் பாடுறீங்க? என்ன சுருதி உங்களுக்கு?" என்று கேட்டார். "சார் ஒரு சுருதி, அதிசய ராகம் பாடல் பாடுகிறேன்" என்றேன். பாடிக்காட்டினேன். "நல்லாயிருக்கு வேற ஏதாவது பாடுங்க, மைக்ல பாடுங்க" என்றார். அவரும் நானும் மட்டும்தான் இருந்தோம். "வராக நதிக்கரையோரம்" பாடினேன். வேற பாடுங்க என்றார். 'தனியே தன்னந்தனியே' பாடினேன். "ஓகே, ஓகே உள்ள வந்துருங்க" என்று அழைத்து "உங்க குரல் நல்லா இருக்கு, கண்டிப்பா உங்களக் கூப்பிடுகிறேன். நிறைய புதுப்பாடல்கள், ஆங்கிலப் பாடல்கள் பாடி பயிற்சி எடுங்கள். ஏன்னா நீங்க நிறைய பழைய பாடல்கள் பாடுவீங்கன்னு சொன்னாங்க" என்றார். அதற்குள் அப்துல் ஹமீது ஐயாவும் வந்துவிட்டார்கள்.

"நேற்றுதான் ராஜ் தொலைக்காட்சி நடத்திய இசைநிகழ்ச்சியில் முதல் இடத்தில் வெற்றி பெற்று மெல்லிசை மன்னரிடம் விருது வாங்கினார்" என்று இசைப்புயலிடம் கூறினார். அவரிடமும், நல்ல குரல், நான் கண்டிப்பாக கூப்பிடுகிறேன் என்றார் இசைப்புயல். நான் வீட்டுக்கு வந்து விட்டேன்.

இப்போதெல்லாம் இன்று பார்த்தவர்களை ஒரு வாரத்திற்குள் மறந்து விடுவோம். ஆனால் இசைப் புயல் அவர்கள் ஐந்து மாதம் கழித்து என்னை அழைத் தார். கொடுத்த வாக்கை மறக்காமல், நம்மிடம் பாடுவேன் என்று அந்தத் தம்பி நினைத்துக் கொண் டிருப்பான் என்று எண்ணி என்னை அழைத்தார்.

நான் இசைப்புயல் அவர்களது ஒலிப்பதிவுக் கூடத்திற்குச் சென்றேன். அங்கே என்னிடம் ஒரு கேசட் கொடுத்தார்கள். திரு. பாரதிராசா அவர்களிடம் துணை இயக்குநராக இருந்த தேன்மொழி அவர்கள் பாடல் தந்தார்கள். அவர்தான் அந்தப் பாடலை எழுதியிருந்தார். அவர் எனக்குள் இருந்த பதட்டத்தை அறிந்து, பயமின்றிப் பாடுங்கள் என்றார். மெட்டு இந்த கேசட்டில் இருக்கிறது, கேட்டு பயிற்சி எடுங்கள் என்றார். நான் கேசட்டைப் போட்டுக் கேட்டேன். குரலே இல்லை. நான் என் குருநாதரிடம் ட்ராக் பாடியிருக்கிறேன். அம்மாதிரி இருக்கும் என்றால் அதுபோல் இல்லை. கவிஞர் தேன்மொழி அவரிக ளிடம் "மேடம் மெட்டு இருக்குன்னு சொன்னீங்க, இதுல இல்லையே" என்றேன். "அதுல ஒரு புல்லாங் குழல் இசை வருதா, அதுதான் மெட்டு" என்றார்கள். நான் பாடிப் பார்த்துக் கொண்டேன்.

உள்ளே அழைத்தார்கள். சென்றேன், இந்தப் பாடலை பின்னணிப் பாடகி திருமதி ஹரிணி பாடிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கவனிக்கும்படிச் சொன்னார் இசைப்புயல். பிறகு இந்தப் பாடலில் தமிழ் மிகவும் கடினமாக இருக்கும் நன்றாக பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். அப்போது பாடகி சாதனா சர்கம் வந்தார். "கேசட்டை எடுத்துக் கொண்டுபோய் நன்றாக பயிற்சி எடுத்துக் கொண்டு நாளை வாருங்கள்" என்றார்கள். நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். அடுத்த நாள் எங்கும் போகவில்லை. பயிற்சி எடுத்தேன். ஒலிப்பதிவுக்கூடம் சென்றேன். 'தீக்குருவியாய் தீங்கனி யென தீக்கைகளில் தீஞ்சுவையென தீப்பொழுதினில் தீண்டுகிறாய் நந்திதா' என்ற பாடல். நான் பாடும் போது சில திருத்தங்கள் சொன்னார். அதைக் கேட்டுப் பாடினேன். நாற்பது நிமிடங்களில் பாடி முடித்தேன். "நன்றாக இருக்கிறது" என்றார் இசைப்புயல்.

அந்தப் பாடல் வெளிவந்ததும் எனக்கு பெரிய மகிழ்ச்சி, பெரிய பெரிய பாடகர்கள் பெயருடன் என் பெயரும் வந்திருந்தது. செய்தித்தாள்களிலும் நன்றாக எழுதினார்கள்.

கேள்வி : **வேறு எந்தெந்த இசையமைப்பாளர் களிடம் பாடியிருக்கிறீர்கள்?**

தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் இசையமைப் பில் இயக்குநர் அகத்தியன் அவர்கள் இயக்கத்தில் வெளியான செல்வம் என்ற படத்தில் 'என்னை சத்தியமா' என்ற பாடலைப் பாடினேன். ஸ்ரீகாந்த தேவா அவர்கள் இசையமைப்பிலும் சபேஷ் முரளி அவர்களது இசையமைப்பிலும் பாடினேன்.

திரு. பரத்வாஜ் அவர்களின் இசை நிகழ்ச்சிகளில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நான்

பாடியதைப் பார்த்து நல்ல ரேஞ்ச் பாடுறியே, நான் வாய்ப்புத் தருகிறேன் என்றார். சொன்னபடியே, பல பாடல்கள் தந்தார். இதயத்திருடன், வட்டாரம், தல அஜ்த் அவர்கள் நடித்த அசல் படத்தில் அதிரி புதிரி என்ற பாடல்கள் எல்லாம் தந்தார். திருட்டுப்பயலே என்ற பாடல் பாடினேன். இந்தப் பாடல் சின்னப் பயலே சின்னப்பயலே என்ற மெட்டில் திரு. வைர முத்து அவர்கள் வேறு வரிகள் எழுதி பாடப் பட்டதாகும்.

திரு. யுவன்சங்கர் அவர்கள் வேர் இஸ் த பார்ட்டி என்ற பாடலைப் பாடும் வாய்ப்புத் தந்தார். அந்தப் பாடல் எனக்கு பெரும் புகழைத் தந்தது.

மெல்லிசை மன்னர் இசை நிகழ்ச்சிகளில் நான் பாடினேன். மெல்லிசை மன்னர் இசையமைத்த மனிதனாயிரு என்ற படத்தில் 'சூரியனே சந்திரனே' என்ற பாடல் பாடும் வாய்ப்புக் கிட்டியது. அந்தப் பாடலை எனக்காகவே மெட்டமைத்தார் என்று கம்போசிங்கில் இருந்தவர்கள் கூறினார்கள்.

ஒருமுறை மெல்லிசை மன்னரின் பிறந்தநாள் விழா மகாலிங்கபுரம் ஐயப்பன் கோவிலில் நடந்தது. அப்போது திரையுலகின் மிகமிக முக்கியமானவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். நான் பாடல் பாடச் சென்றிருந்தேன். நான் வெளியில் நண்பர்களுடன் நின்று கொண்டிருந்தேன். அண்ணன் உங்களைக் கூப்பிடுகிறார் என்று சொன்னார்கள். நான் உள்ளே சென்றேன். மெல்லிசை மன்னர் அவர்கள் "தம்பி எங்க போனீங்க" என்றார். "வெளியில்தான் நின்று கொண்டிருந்தேன்" என்றேன். "சரி வாங்க" என்று என்னை இசைஞானி அவர்கள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, "தம்பி இந்தத் தம்பி நல்லா பாடுறாரு, உங்க படத்துல பாட வாய்ப்புக் கொடுங்க" என்றார். அவரும் சரி என்றார். நான் இறக்கை யில்லாமலே வானத்தில் பறந்துவிட்டேன். ஒரு இமய மலை இன்னொரு இமயமலையிடம் எனக்காக வாய்ப்புக் கேட்டதை என்னால் மறக்கவே முடியாது.

இதைப்போல் இன்னொரு பெரிய மகிழ்வான நிகழ்வும் என் வாழ்வில் நடந்தது. எனது திருமணத் திற்கு, மெல்லிசை மன்னர், திரு. டி.எம்.சௌந்தராசன், திருமதி.ஜானகி, திரு. கிருஷ்ணராஜ், திரு. டி.எல். மகராசன், திரு. சுரேந்தர் என்று பலர் வந்து வாழ்த்தி னார்கள். மெல்லிசை மன்னர் அவர்கள் "தம்பி, என் மனைவி உங்க ரசிகை. நீங்க பாடுற கர்ணன் பாட்டை ரொம்ப ரசிப்பாங்க, அவங்க இந்த அன்பளிப்ப உங்களுக்குக் கொடுக்கச் சொன்னாங்க" என்று எனக்கு அன்பளிப்புக் கொடுத்தார். அவரது சொற்கள் எனக்கு மிகப்பெரிய வரம் என்றே சொல்வேன். இவையெல் லாம் எனக்கு ஆண்டவன் இசையின் மூலமாகக் கொடுத்தான்.

இசைஞானி அவர்களிடம் குழுப்பாடகராக சில பாடல்களில் பாடினேன். அவரிம் பேச இயலவில்லை.



மெல்லிசை மன்னருக்காக என்னுள்ளே எம்எஸ்வி என்ற நிகழ்ச்சியை இசைஞானி அவர்கள் நடத்த முடிவு செய்து வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது இசைஞானியின் குழுவில் தாள வாத்தி யங்கள் வாசிக்கும் ஜெயச்சா அண்ணன், இசைஞானி யிடம் "முகேசு பழைய பாடல்களை நன்றாகப் பாடுவார்" என்று சொல்ல, நான் அழைக்கப்பட்டேன். "செந்தமிழ்நாட்டுச் சோலையில் சிந்து பாடித் திரியும் பூங்குயிலே என்ற பாடல் தெரியுமா" என்று கேட்டார் இசைஞானி. தெரியும் என்றேன். அந்தப் பாடலை அந்த நிகழ்ச்சியில் பாடினேன். பின்னர், நீயே 'கண்ணில் தோன்று காட்சி யாவும்' பாடலையும் பாடு என்றார். பாடினேன். ரசிகர்கள் கேட்கும் பாடலை பாடுவோம் என்ற அறிவிப்பினால் வான் நிலா என்ற பாடலை ரசிகர்கள் கேட்க, அதையும் என்னையே பாட வைத்தார் இசைஞானி இளையராஜா அவர்கள்.

தாரை தப்பட்டை என்ற படத்தில் பாடுவதற்கு எனக்கு வாய்ப்பு வந்தது. நான் பாடினேன். இசைஞானி அவர்களே எனக்கு பாடல் சொல்லிக் கொடுத்து பதிவு செய்தார்கள். அதை நான் மறக்கவே முடியாது.

திரு.டி.இமான் அவர்கள் இசையில் 'ஓடி ஓடி விளையாடு, மாசிலாமணி என்ற படத்திலும், கச்சேரி கச்சேரி களை கட்டுதடி என்ற பாடலும் வடிவேல் சார் படமான தெனாலிராமன் படத்தில் ஒன்னு ரெண்டு மூணு, நாலு என்ற பாடலும், வாடா வாடா பையா என் வாசல் வந்து என்ற பாடலும் பாடினேன்.

இளையதளபதி விஜய் அவர்களின் சிவகாசி படத்தில் "என் தெய்வத்துக்கே மாறு வேசமா" என்ற பாடல் பாடுவதற்கு திரு. ஸ்ரீகாந்த் தேவா அவர்கள் வாய்ப்புக் கொடுத்தார். திரு. சத்யராஜ் அவர்கள் நடித்த

வெற்றிவேல் சக்திவேல் படத்தில் பாடியிருக்கிறேன். திரு. தமன் இவர்கள் இசையமைப்பில் கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தில் 'லவ் லெட்டர் எழுத ஆசப் பட்டேன்' என்ற பாடல் பாடினேன். தமிழ்ப்படம் என்ற படத்தில் பச்சை மஞ்சள் சிவப்பு தமிழன் நான் என்ற பாடல் பாடியிருக்கிறேன்.

திரு. ஹாரிஸ்ஜெயராஜ் அவர்கள் இசையமைப்பில் 'அழகே அழகே அழகின் அழகே நீயடி' என்ற பாடல் பாடினேன். நிறையப் பேர் இது எனது குரல் இல்லை என்று சொல்வார்கள். நான்தான் பாடினேன் என்று சொல்வேன். சிறந்த மெல்லிசைப்பாடல் அது. ஜெயம் ரவி அவர்கள் நடித்த எங்கேயும் காதல் என்ற படத்தில் 'தீயில்லை, புகையில்லை ஒரு வேள்வி செய்கிறாய்' என்ற பாடல் பாடும் வாய்ப்பையும் திரு. ஹாரிஸ்ஜெயராஜ் அவர்கள் தந்தார்கள். நண்பன் படத்தில் ஆல் இஸ் வெல் பாடல் பாடும் வாய்ப்பையும் தந்தார்.

திரு. சாம்.சி.எஸ் அவர்கள் இசையமைப்பில் விக்ரம் வேதா படத்தில் 'டசக்கு டசக்கு டசக்கு' என்ற பாடலைப் பாடியிருக்கிறேன்.

தேவிஸ்ரீபிரசாத் அவர்கள் எனக்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்தார். தனுஷ் அவர்கள் நடித்த குட்டி படத்தில் 'நீ காதலிக்கும் பொண்ணு காதலிக் கலன்னா' பாடல் பாடினேன். 'கண்ணு ரெண்டும் ரெங்க ராட்டினம்' வேங்கை படத்திலும் வாய்ப்புத் தந்தார். ஊசுரவல்லி என்ற தெலுங்குப் படத்தில் பாட வைத்தார். தெலுங்கில் அதன் பிறகு பல பாடல்கள் பாட வாய்ப்பு வந்தது. கன்னட மொழியில் பத்து பாடல்கள் பாடியிருக்கிறேன். அதில் மறைந்த இசையமைப்பாளர் திரு. பாரதிதாசன் அவர்கள் இசையில் வெளியான மன்மதா படத்தில் பாடினேன்.

கேள்வி: **உலகெங்கும் உள்ள மேடைகளில் பாடிக்கொண்டிருக்கிறீர்களே அதைப் பற்றிச் சொல்லுங்கள்?**

அதற்குக் காரணம் பழைய பாடல்கள்தான். தமிழர்கள் பழைய பாடல்களை விரும்பிக் கேட் கிறார்கள்.

**உலகெங்கிலும் ஈழத்தமிழர்கள் வாழ்கிறார்கள் அவர்களுடைய பாடல்கள் பாடுகிறீர்களா?**

ஈழத்தமிழ்ப் பாடல்களும் பாடுகிறேன். மேடையில் பாடுவது மட்டுமல்லாமல் அவர்கள் இசையமைத்த பாடல்களையும் பாடியிருக்கிறேன். அதில் இசையமைப் பாளர் இசைப்பிரியன் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். நல்ல இசைத்திறமை உள்ள ஒரு இசையமைப்பாளர். இவர் இசையமைத்த பாடல் களைப் பாடப் போகும்போது எளிதாகப் பாடிவிட லாம் என்று போக முடியாது. கடினமாக இருக்கும், அதே நேரத்தில் பாடி முடித்தபின் ஒரு நல்ல பாடலைப் பாடியிருக்கிறோம் என்ற நிறைவு ஏற்படும். அவர் இசையமைத்த 'முப்படை கண்ட முதல் தமிழன்' என்ற பாடலை எல்லோரும் பாடச் சொல்லிக் கேட்பார்கள். மிகச்சிறந்த பாடல் அது.

கேள்வி: **உங்களிடம் இசை தவிர வேறொரு கலைஆற்றல் இருப்பதாகவும், அந்தக் கலையை உலகிற்கு முதன் முதலில் கொண்டு வந்தது நீங்கள்தான் என்றும் சொல்லுகிறார்களே அது பற்றிச் சொல்ல முடியுமா?**

Zee தமிழ் தொலைக்காட்சியில் சரிகமப என்ற இசை நிகழ்ச்சி நடந்து வருகிறது. அதில் பத்து பின்னணிப் பாடகர்கள் பத்து போட்டியாளர்கள் என்று ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதில் நானும் கலந்து கொண்டேன். அந்த நேரத்தில் அலைபேசிகளில் நடிகர்கள் பேசிய டயலாக்குகள் வந்து கொண்டி ருந்தன. என்னிடம் திரு. கவுண்டமணி அவர்கள் பேசிய டயலாக்குகள் இருந்தன. இதவச்சு யாரையாவது கிண்டல் பண்ணலாம் என்று யோசித்தேன். எங்களோடு 'கரிகாலன் காலப்போல' என்ற பாடலோடு பல பாடல்களைப் பாடிய பின்னணிப் பாடகர் திருமதி சங்கீதா அவர்களும் இருந்தார்கள். அவர்களிடம் நான் சென்று 'உங்க பேரச் சொல்லுங்களே' என்றேன். எதற்கு என்று கேட்டார்கள் "சும்மா சொல்லுங்களே" என்றேன். அவர்கள் "சங்கீதா" என்றார்கள். உடனே எனது அலைபேசியில் இருந்து திரு. கவுண்டமணி அவர்கள் பேசிய 'சங்கீதா, சங்கூதுர வயசில சங்கீதா' என்ற டலாக்கைப் போட்டேன். அரங்கத்தில் இருந்த அனைவரும் சிரித்தனர். சங்கீதா அவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். இதைப் பார்த்த அந்த நிகழ்ச்சியின் இயக்குநர், நீங்கள் பாடகர்கள் பற்றி கருத்தக் கூறும்போது இது மாதிரி செய்யுங்கள் என்றார். அதன் பின் அதை நிகழ்ச்சிகளிலும் செய்தேன். அவைகள் தொலைக்காட்சிகளிலும் வந்து வரவேற் பைப் பெற்றது. இப்போது, அதுமாதிரி டயலாக்குகள் போடுவதற்காகவே சிலர் நியமிக்கப்படுகிறார்கள். அது சிலருக்கு வேலை வாய்ப்பாகவும் அமைந்து விட்டது.


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/-**
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/-**
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ. 10,000/-**
**(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**



# ஆஸ்திரேலியா காட்டுத்தீ 50 கோடி விலங்குகள் பலி ?

ஆஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள நியூசவுத்வேல்ஸ், விக்டோரியா மாகாணங்களில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் காட்டுத்தீ எரிந்து வருகிறது.

இந்த காட்டுத்தீயில் இதுவரை 24 பேர் பலியாகி உள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தீயில் கருகி சாம்பலாகி உள்ளன. மேலும் இந்த காட்டுத் தீயில் கோலா கரடி, கங்காரு உள்பட பல ஆயிரக் கணக்கான வன உயிரினங்கள் செத்து மடிந்துள்ளன.

இது சர்வதேச அளவில் விலங்குகள் நல ஆர்வலர் களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் அதிக அளவில் தண்ணீரைக் குடிப்பதால் சுமார் பத்தாயிரம் ஒட்டகங்களை சுட்டுக் கொல்ல ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்த நாட்டின் தெற்குப் பகுதியில் பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் யான்குனிதட்ஜாரா பகுதியில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் அங்கு குடிநீர் கட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

இப்படியான சூழலில் அங்கு அதிகம் காணப்படும் பெரல் வகை ஒட்டகங்கள் மிக அதிக அளவில் தண்ணீரைக் குடித்து மனிதர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

குடியிருப்புப் பகுதிகளுக்கு வந்து தண்ணீரைக் குடிக் கும் ஒட்டகங்கள், வீட்டு வேலைகளைத் தட்டுவதுடன், ஏசி யில் வழியும் நீரைக் குடிப்பதற்காக வீடுகளைச் சுற்றிச் சுற்றி வந்து இடையூறு செய்வதாகவும் அங்குள்ள மக்கள் தொடர்ந்து புகார் கூறிவருகின்ற னர்.

இது ஒருபுறம் இருக்க அந்த ஒட்டகங்களின் கழிவுகள் ஒரு டன் கார்பன் டை ஆக்சைடுக்கு நிகரான மீத்தேன் வாயுவை உருவாக்குவதாகவும், இது புவி வெப்பமயமாதலுக்கு ஒரு காரணமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதன்காரணமாக பெரல்வகை ஒட்டகங்களை சுட்டுக் கொல்ல அந்த நாட்டு அரசு முடிவெடுத் துள்ளது. அதன் படி 5 நாட்களுக்குள் பத்தாயிரம் ஒட்டகங்களை சுட்டுக் கொல்ல உத்தரவிடப்பட்டு உள்ளது.

துப்பாக்கியால் சுடுவதில் கைதேர்ந்த நபர்களைக் கொண்டு ஹெலிகாப்டரில் பறந்து ஒட்டகங்களை சுட்டுக் கொல்லத் திட்டமிடப்பட்டு, அதன்படி ஒட்ட கங்களை சுட்டுக் கொல்லும் பணி தொடங்கியது.

●

**இன்னா நாற்பது**

**அறமனத்தார் கூறும் கடுமொழியும் இன்னா,**
**மறமனத்தார் ஞாட்பின் மடிந்து) ஒழுகல் இன்னா,**
**இடும்பை உடையார் கொடையின்னா, இன்னா**
**கொடும்பாடு) உடையார்வாய்ச் சொல்.**

**அறநெறி தவறாதவர்களின் கடுமொழியும் (சாபம்) போர்க்களத்தில் வெற்றிக்காக தமது வீரத்தை காட்டாத வீரனும், பொருள் இல்லாதவரின் கொடை இயல்பும், கொடுமையாளர்கள் சொல்கின்ற சொல்லும் துன்பத்தைத் தருவனவாகும்.**

# திருக்குறள் ஓர் இட்டளி!

சொல்லாய்வுச்செம்மல் கும்பகோணம் **வய்.மு. கும்பலிங்கன்**



வேட்டி யாருக்கு வேண்டும்?
அப்பாவுக்கு!
புடைவை யாருக்கு வேண்டும்?
அம்மாவுக்கு!
இட்டளி யாருக்கு வேண்டும்?
அப்பா, அம்மா, குழந்தைகள் உள்ளிட்ட அனைவருக்குமே!
.... .... ....
பைபிள் யாருக்கு உரியது?
கிறித்தவர்களுக்கு!
குரான் யாருக்கு உரியது?
இசுலாமியர்க்கு!
இராமாயணம், பாரதம் யாருக்கு உரியது?
இந்துக்களுக்கு!
திருவாய்மொழி, திவ்வியபிரபந்தம் யாருக்கு உரியது?
வைணவர்கட்கு!
தேவாரத் திருவாசகம் யாருக்கு உரியது?
சைவர்கட்கு!
திருவருட்பா யாருக்கு உரியது?
சமரச சுத்த சன்மார்க்கிகட்கு!
திரிபீடகம் யாருக்கு உரியது?
பௌத்தர்கட்கு!
சீவகசிந்தாமணி, சூளாமணி
யாருக்கு உரியது?
சமணர்கட்கு!
திருக்குறள் யாருக்கு உரியது?
கிறித்தவர்கள், இசுலாமியர்கள்,
இந்துக்கள், சைவர்கள், வைணவர்கள்,
சமரச சுத்த சன்மார்க்கிகள்
உட்பட்ட அனைவருக்குமே!
ஆம். திருக்குறள் ஓர் இட்டளி!
இட்டளி அனைவருக்குமே
வேண்டிய பொது உணவாகும்.

---

குறிப்பு : *இட்டு அவிப்பது இட்டவி ஆயிற்று.*
*இட்டு அளிப்பது இட்டளி ஆயிற்று.*
*இட்லி, இட்டிலி, இட்டலி என்பன தவறான வடிவங்கள் ஆகும்.*

மாட்டுக்கறி

# மாட்டுக்கறி தின்ற பார்ப்பனர்கள்!



ஆரிய பிராமணன் பசுமாட்டை வெட்டி சமைத்து சாப்பிடுவதற்கு கூர்மையான வாள் கோடரி பயன் படுத்தினார்கள் என்று...

ரிக்வேதம் 10/72/6 சுலோகம் சொல்லுகிறது

ரிக்வேதகால ஆரிய பிராமணன், உணவுக்காக பசுக்களை கொன்றார்கள் என்பதையும், அவற்றின் இறைச்சியை அவர்கள் விரும்பி உண்டார்கள் என்பதனை...

ரிக்வேதம் 10/86/14 தெளிவுப் படுத்துகிறது

இந்திரன் கூறுகிறான் அவர்கள் மொத்தம் பதினைந்து பசுக்களையும் இருபது காளை மாடுகளையும் சமையல் செய்து சாப்பிட்டார்கள்".

அக்கினிக்காக குதிரைகளும், எருதுகளையும், காளை மாடுகளையும் கன்று ஈனாப்பசுக்களும் ஆட்டுக் கடாக்களும் கொல்லப்பட்டன என...

ரிக்வேதம் 10/91/14 கூறுகிறது

அறுத்து பலியிடும் இறைச்சியை உண்ணாத மனிதன் 21 ஜென்மங் களுக்கு பலியிடும் விலங்காக உருவெடுப்பான்

மனு ஸ்மிருதி பாகம் 5 / வசனம் 35

இறைச்சிக்குரிய மிருகங்களை உண்ணுவது பாவமில்லை. உண்ணு பவர்ளையும் உணவுகளையும் பிரம் மனே படைத்தான்.

மனு ஸ்மிருதி பாகம் 5/ வசனம்30

பெண்களின் திருமண வைபவங் களில் பசு மாட்டையும் காளை மாட்டையும் அறுக்க வேண்டும்

ரிக் வேதம் 6/17/1

வேதகாலத்தில் பசுமாடுகள் புனிதமாக கருதப் பட்டன. பசுவின் இந்த புனிதத்தன்மை காரணமாக பசு மாட்டுக்கறியை ஆரிய பிராமணர்கள் உண்டார்கள்.

இராமாயணத்தில் இராமன் தன்னுடைய மனைவி சீதையை மடியில் படுக்க வைத்துக்கொண்டு நெய்யில் வறுத்த மாட்டுக்கறியை சீதைக்கு ஊட்டினான் என்று வால்மீகி இராமாயணக் குறிப்பு கூறுகிறது.

அதே வால்மீகி இராமாயணத்தில் இராமனுடைய தந்தை தசரதனுக்கு மக்கட்பேறு பாக்கியம் இல்லாத காரணத்தால், நூற்றுக்கணக்கான பசுமாடு, குதிரை, பன்றி, பாம்பு, ஆமை போன்ற விலங்குகளை யாகத்தில் போட்டு எரித்துக் கொன்றார்கள். இதில் நன்றாக வெந்த மாட்டுக்கறி பாகத்தை யாகம் செய்த பிராமணர்கள் சாப்பிட்டார்கள் என்று (பால காண்டம்) குறிப்பு சொல்லுகிறது.

இந்து வேதங்களின் மாட்டுக்கறியை உண்ணாத ஒருவன் சிறந்த இந்துவாக இருக்க முடியாது.

[ The Complete Work Of Swami Vivekananda Vol 3 Page 536 ]

பறையர்களை விட பிராமணன்தான் அதிகளவு மாட்டுக்கறியை சாப்பிட்டான். ஏனென்றால்? அக்காலகட்டத்தில் பறையர்களுக்கு பசுமாட்டுக்கறி கிடைப்பது அவர்களுடைய பொருளாதார வசதிக்கு கடினம். ஆனால் பிராமணனுக்கு மாட்டுக்கறி தினதோறும் ஈசியாக கிடைத்துவிடும்.

எப்படி என்றால்?

பிராமணன் எங்கெல்லாம் யாகம் செய்ய போகிறானோ அங்கெல்லாம் பசுமாட்டை பலி கொடுப்பதை இந்துகள் ஒரு புனிதமான காரியமாகவே கருதினார்கள். எனவே யாகத்தில் பலி கொடுக்கப்பட்ட பசுமாட்டுக்கறியை பிராமணனுக்கு கொடுப்பது இந்துக்களின் வழக்கம்.

இன்றுகூட நம்முடைய நடைமுறை வாழ்க்கையில், ஏதாவது ஒரு இந்து வீட்டில் யாகம் செய்தால் யாகத்தில் படைக்கப்பட்ட பொருட்களை அப்படியே பிராமணன் எடுத்துக்கொண்டு போயிவிடுவான்.

உதாரணத்துக்கு, இந்து வீட்டில் யாராவது இறந்தால், இறந்தவருக்கு 16வது நாள் காரியம் செய்வது வழக்கம். இதில் பச்சஅரிசி தேங்காய், வாழைப்பழம், ஒன்பது வகையான காய்கறிகள் வைப்பது நடைமுறை. இதில் பயன்படுத்தும் பொருட்களை அப்படியே ஆரிய பார்ப்பான் கொண்டு சென்று விடுவான்.

ஏன் பிராமணன் மாட்டுக்கறியை சாப்பிடுவதை தவிர்த்தான்?

கிமு5ஆம் நுற்றாண்டு வாக்கில் இந்தியாவில் “புத்தம் மதம்“ வீரியமாக வளர்ந்தது. புத்த மதம் வீரியமாக வளர்வதற்கு முக்கியக் காரணம் புத்த மதம் கடவுள் என்கிற பெயரில் பலியிடுவதை எதிர்த்தது. இதன் காரணமாக மக்களுக்கு புத்த மதத்தின் மீது ஒருவகையான ஈர்ப்பு ஏற்பட்டு மக்கள் புத்தமதத்துக்கு மாறினார்கள் அல்லது அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

இதனை சகித்துக்கொள்ள முடியாத ஆரிய பார்ப்பனீய கூட்டம், புத்த மதத்தை அழிக்க முயற்சி எடுத்தது. இதன் நீட்சியாக ஆரிய பிராமணன் புத்த மதத்தை அழிக்க புத்திஸ்ட்கள் எடுக்கும் ஆயுதத்தையே கைலெடுத்தார்கள்.

ஒருவனை அழிக்க அவனுடைய கோணத்திலே சென்று, அவன் பயன்படுத்திய ஆயுதம் எடுத்து அழிப்பது ஒருவகையான ராஜதந்திரம் “அதுதான் மாடு“

ஆரிய பார்ப்பனீயன் புத்த மதத்தை அழிப்பதற்காக பசுமாட்டை கடவுளாக வழிபடவும் மாட்டுக்கறியை இனி தின்ன மாட்டோம் என்கிற முடிவை எடுத்தார்கள். பார்ப்பனீயன் பசுமாட்டுமீதுள்ள அக்கரையால் பசுமாட்டுக்கறியை சாப்பிடுவதை தவிர்க்கவில்லை. மாறாக அவன், தான் இறக்குமதி செய்த கடவுளைக் காப்பாற்றிக்கொள்ளவும். தன் மதத்தை விரிப்படுத்துவும்தான் பசு மட்டுக்கறியை தின்பதை நிறுத்தினார்கள். இதற்கு ஆதாரம்தான் மேலே உள்ள ஆதாரங்கள்.

ஆரிய பிராமணன் மாட்டுக்கறி சாப்பிட்டான் என்பதனை விளக்க நாம் ஒன்றும் அம்பேத்கர் நூலிருந்தோ, பெரியார் நூலிருந்தோ, வீரமணி எழுதிய நூலிருந்தோ ஆதாரத்தை மேற்கோள் காட்டவில்லை. மாறாக அவர்களுடைய புனித நூலான மனு ஸ்மிருதி, மனுதரும் சாஸ்திரம் மற்றும் விவேகானந்தர் நூலிருந்துதான் ஆதாரத்தை காட்டுகிறோம்.

கம்ப இராமாயணத்தில் கம்பன், இராமன் மற்றும் பிராமணன் காய்கறிகளை மட்டுமே சாப்பிட்டார்கள் என்று சொல்லிருப்பது பச்ச பித்தலாட்டமேயொழிய வேறொன்றுமில்லை.

வால்மீகி இராமாயணத்தில், வால்மீகி, இராமனையும் பார்ப்பனர்களையும் வெகு சாதாரணமான மனிதர்களாகவே காட்டியிருப்பார். ஆனால் கம்ப இராமாயணத்தில் கம்பன் இராமனையும் பார்ப்பனீயர்களையும் கடவுளாக வெளிப்படுத்திருப்பார்.

இடைநிலை சாதிக்காரன் ஏன் மாட்டுக்கறி சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டான்“?

எப்போதும் மனிதன், ஒருவன் செய்வதை தானும் அப்படியே செய்ய வேண்டுமென நினைப்பான். பார்ப்பனீயனைப் போல இடைநிலை சாதிக்காரனுக்கு

*கொஞ்சம் கொஞ்சமாக மாட்டுக்கறி தின்பதை நிறுத்திக்கொண்டான்.*

*சில இடைநிலை சாதிக்காரன் பிராமணன் போல முதுகில் பூணூால் போடும் பழக்கத்தையும் கடைபிடித்தான். இன்றும் நம்முடைய சமகாலத்தில் சில இடைநிலை சாதிக்காரன் பூணூால் அணிவதைக் காணமுடியும்.*

*ஒருகாலகட்டத்தில் பறையர்கள் கூட பார்ப்பனீயன் போல பூணூால் போடும் பழக்கத்தில் ஈடுபட்டார்கள். ஆனா பறையர்கள் தொடர்ந்து பூணூால் அணிவதை தவிர்த்தார்கள். ஏனென்றால்? பறையர்கள் கடுமையான உழைப்பாளிகள் என்கிற காரணத்தால் அவர்களுக்கு வேலை செய்யும்போது ஒருவகையான தொந்தரவாக பூணூால் இருந்த காரணத்தால் வேலை செய்யும்போது பறையர்கள் பூணூாலை கழட்டி வைத்துவிட்டு வேலை செய்ய ஆரம்பித்தார்கள். அதுவே பிற்காலத்தில் பறையர்கள் நமக்கு பூணூால் தேவையில்லாத ஒன்றுனு நினைத்து பூணூால் அணிவதை முற்றிலும் தவிர்த் தார்கள்.*

*பிராமணன் இரண்டு புரட்சிகளைச் செய்தார்கள் என்று அம்பேத்கர் சொல்லுகிறார்.*

*1. பிராமணன் பசுமாட்டுக்கறியை தவிர்த்தது ஒரு புரட்சி.*

*2. காய்கறி உணவு உண்பவர்களாக மாறியது மற்றொரு புரட்சி என்று அம்பேத்கர் தன்னுடைய தீண்டப்படாதவர்கள் நூலில் குறிப்பிடுகிறார்.*

*இந்தியச் சமூகத்தில் பறையர்கள் மட்டுமே மாட்டுக் கறியைச் சாப்பிட்டார்கள் என்பது முழுமையான வடிகட்டிய பொய். மாட்டுக்கறியை பறையர்களை விட ஆரிய பிராமணன் அதிகளவில் சாப்பிட்டான் என்பதே உண்மை*

*இன்றளவும் இந்துகள் தங்களுடைய கடவுளுக்கு ஆடு மாடு பன்றி போன்ற விலங்குகளை பலியிடுவதை பழக்கமாக கடைபிடிக்கிறார்கள்.*

*இதனுடைய அர்த்தம் என்னவென்றால் தங்களு டைய கடவுளுக்கு மேலே குறிப்பிட்டுள்ள விலங்கு களின் கறி பிடிக்கும் என்பதால்தான்.*

*இந்துகள் கடவுளுக்கு பலியிடுவதே அது கடவுளுக்கு பிடிக்கும் என்பதுதால்தான்.*

*இந்து மதம் புத்த மதத்திலிருந்தே உருவவழிபாடு சிலை வழிபாடுகளை திருடிக்கொண்டது. மேலும் இந்து மதம் புத்த மதத்திலிருந்தே கர்மவினை போன்ற மறுபிறவி தத்துவங்களையும் திருடிக்கொண்டது.*

*பாம்பு எப்படி கரையான் கட்டிய புற்றை ஆட்டையை போடுகிறதோ அதுபோலவே இந்து மதம் தனக்கு தேவையான நல்ல விஷயங்களை அனைத் தையும் புத்த மதத்திலிருந்தே திருடிக்கொண்டது.*

*புத்த மதத்தை அழித்தே இந்து மதம் வளர்ந்தது.*

**வாட்ஸ் ஆப் பதிவு.**



சர்வபள்ளி ராதாகிருஷ்ணனுக்கு ஆசிரியர் தினம் கொண்டாடுவதின் இரகசியம்?

நம்ம சாவித்ரிபாய் பூலேவுக்கு ஆசிரியர் தினம் கொண் டாடும் போது ஒரு தோழர் ஏன் இவனுக (பார்ப்பானுக) ராதாகிருஷ்ணனுக்கு ஆசிரியர் தினம் கொண்டாடுரானுகன்னு கேட்டார்.

அது ஏன்னா பீகாரைச் சேர்ந்த ராகுல் சாங்கிரதியன் தனது “இந்து தத்துவ இயல்” நூலில் ராதாகிருஷ்ணன் இந்து மதத்தில் அனைத்து தத்துவமும் உள்ளதுனு சொல்லிட்டு ஐரோப்பிய தத்துவ ஆசிரியர்களான தோல், பித்தாகர்ஸ், சாக்ரடிஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ஜேனோ ஆகியோ ருடன் கனாதர், கபிலர், ஜைமினி, வியாசர், கவுதமர், பதஞ்சலி ஆகியோரை ஒப்பிடுகிறார் ஐரோப்பிய தத்துவ ஆசிரியர் களின் காலமும் தத்துவமும் இரண்டுமே வேறானவை ஏன் இப்படி ஒப்பிடுகிறார். அது சரி ராதிகிருஷ்ணன் தன்னுடைய பார்ப்பனர் பரம்பரையினரிடம் சாப்பிட்ட உப்பிற்கு இதைக்கூட செய்யாமல் இருந்தால் எப்படினு கேட்கிறார் ராகுல் சாங கிரதியன். மேலும் விரிவாக இந்த நூலில் ராதா கிருஷ்ணனைப் பற்றி எழுதியுள்ளார் என்று சொல்வதைவிட வெளுத்து வாங்கியுள்ளார். இப்ப புரியுதா ராதாகிருஷ்ணனின் ஆசிரியர் தின இரகிசியம்.

**கா. பிரபு**

நளாயினி

நளராசன் மகள் நளாயினி
இச்சைக்குகந்த பச்சைக்கிளி
பேரழகுப் பெட்டகத்தை
குரங்கு கை மலர் மாலையாய்
மௌத் கல்யாண்முனிவன்
வஞ்சகமனதோடு மணந்தான்

அத் தொழுநோய் கணவன் விரும்பிட
கூடையிலமர்த்தி தலைச் சுமையாய்
தாசி வீடு சென்று வருகையில்
ஒய்யாரமாய் நீட்டிய கால்
கழுவேறி வலியில் துடித்த
மாண்டிவ்ய முனியை இடிக்க
கதிரவன் உதிக்கும் வேளை
நளாயினி கணவன் தலை சிதற
அம்முனிவன் சாபமிட
விடியலுக்கும் முன்னே
சூரியோதயம் நிறுத்தி
இவ்வுலகிற்கு
கற்பரசி மகிமை உணர்த்திட்டாள்

இக்கதை சொன்ன வேதாளம்
நளாயினி மகிமை அறியச் செய்தவன்
ஒய்யார கால் நீட்டியா
கழுவேறி துடித்தவனா
விக்கிரமாதித்தா பதிலுரையென்றது
விக்கித்து நின்றான் விக்கிரமன்.

இளந்தேவன்,
திருச்சி. 9345551231.





அமெரிக்காவில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகிற அபிஜித் பானர்ஜி, அவர் மனைவி எஸ்தர் டியூப்லோ ஆகியோருக்கு பொருளாதாரத்திற்கான நோபல் விருது!

அபிஜித் பானர்ஜி, அவரது மனைவி எஸ்தர் டியூப்லோ பொருளாதார ஆய்வுகள், வறுமை ஒழிப்பில் வெற்றிகரமாகச் செயல்பட்டனர். இருவரும் அமெரிக்க வாழ் மேற்கு வங்க மாநிலத்தவர்கள்.

இவர்களால், இந்தியாவில் சுமார் 50 இலட்சம் குழந்தைகள் பள்ளிக் கல்வி பெற்றுள்ளனர். தவிர, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளனர். குறிப்பாக, நோய்த் தடுப்புத் திட்டங்கள் குறித்த இவர்களது ஆய்வுகள், உலக நாடுகள் பலவற்றை பலனடைய செய்துள்ளது. ஏழை எளிய மக்களின் பொருளாதா வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்த கணவன் மனைவி இருவருக்கும் உலகின் உயரிய நோபல் பரிசு கிடைத் திருக்கிறது.

## தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும்!

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் தென்னைக்குத் தானே நெறி கட்ட வேண்டும்? பனைமரத்துக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்று யோசிக்கிறீர்களா? இந்தப் பழமொழியை அப்படியே படித்தால் பொருள் சரியாக இருக்காது. எங்கே ஒரு செயல் நடந்தால், அதன் விளைவு வேறு எங்கோ தெரியும் என்றுதான் நமக்குப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இதன் உட்பொருள் வேறு. தென்னை மரத்தில் ஏறுபவர்கள் பூச்சிக்கடிகளால் பாதிப்பு வராமலிருக்க ஒருவிதமான எண்ணெய் அல்லது சாந்தை உடலில் பூசிக் கொண்டு மரமேறுவார்கள். அப்படி ஏறும் போது மரத்தில் இருக்கும் தேள் கொட்டினால், அவர்களுக்கு அந்த எண்ணெயின் மருத்துவக் குணத்தால் வலி தெரியாது. ஆனால், தேளின் நஞ்சு தோலினுள் ஊடுருவி இருந்தால், சிறிது நேரத்துக்குப் பிறகு, கொட்டிய இடத்தில் நெறிக் கட்டிக் கொள்ளும். அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மற்றொரு மரத்தில் ஏறும்போது தான் அதன் உண்மையான வலி தெரியும். அதன் பின் மருத்துவச் சிகிச்சை எடுப்பர். தென்னை மரத்தில் ஏறும்போது தேள் கொட்டினால் பனை மரத்தில் ஏறும்போது நெறிக் கட்டும் எனற உண்மையான பழமொழியே இப்போது தென்னைமரத்தில் தேள் கொட்டிால் பனை மரத்தில் நெறிகட்டும் என்று கூறப்படுகிறது.

# கீழடியும் நெடுநல்வாடையும்

முனைவர் க. மோகன்காந்தி,
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றம் ஆய்வுத்துறை,
தனியார் கல்லூரி, திருப்பத்தூர்.

தமிழரின் பண்பாட்டுத்தளம் 2600 ஆண்டுகள் பழமையுடையது என்பதைக் கீழடி அகழாய்வுகள் சான்று பகிர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு இனத்தின் வரலாற்றுச் சான்றுகளோடு நிறுவ வேண்டுமெனில் கல்வெட்டுகள், பானை ஓட்டு எழுத்துகள், அகழாய்வுகளில் கிடைக்கும் தானியங்கள், எலும்புத் துண்டுகள், உலோகங்கள் ஆகியவை முதன்மை பெறுகின்றன. இப்பொருட்களைக் காட்டிலும் இலக்கியங்கள் தொடர்ச்சியான ஒரு வரலாற்றை நம் முன் வழங்கியுள்ளன.

தமிழரின் பழமை மிகுந்த இலக்கியங்களாகப் போற்றப்படுவன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப்படும் சங்க நூல்கள். பத்துப்பாட்டில் ஒன்றாகப் போற்றப்படும் நெடுநல்வாடை 188 அடிகளால் நக்கீரர் என்னும் நல்லிசைப் புலவரால் பாடப் பெற்ற நூல். இந்நூலின் பாட்டுடைத் தலைவன் பாண்டிய மன்னன் ஒருவன். அம்மன்னன் பாண்டிய நெடுஞ்செழியன் என்பது சான்றோர் கூற்று. இந்நூல் பாண்டிய மன்னர்களின் பரலாற்றுப் பின்புலத்தில் எழுந்ததே என்பதற்கு,

'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃக்மொடு' (நெடுநல்வாடை 176)

என்னும் நெடுநல்வாடை அடிகள் பாண்டியர்கள் மாலையாகச் சூடும் வேப்பந்தாரைப் பதிவு செய்துள்ளதால் தெளியலாம். நக்கீரரால் பாடப் பெற்றிருக்கும் நெடுநல்வாடை பாண்டியனின் தலைநகரமான மதுரையை மையப்படுத்திப் பாடப் பட்டுள்ளது.

இன்றைக்கு அகழாய்வு நடந்த கீழடி, மதுரையிலிருந்த 15 கி மீட்டர் தொலைவில் உள்ளது. ஏறத்தாழ இரண்டும் ஒரே பண்பாட்டுத்தளம்.



நெடுநல்வாடை மற்றும் கீழடியின் காலமும் ஏறத்தாழ ஒரே காலம். இவ்விரண்டு பகுதிகளும் அக்காலத்தில் வழக்கில் இருந்த யானைத் தந்தத்தால் செய்த பொருட்களைப் பற்றிப் பேசுவது இங்கு மிகவும் நோக்கத்தக்கது.

கீழடியில் கிடைத்த அகழாய்வுப் பொருட்களில் குறிப்பிடத்தக்க ஒன்று யானைத் தந்தத்தால் செய்யப்பெற்ற சீப்பு. சீப்பு தலைவாருவதற்காகத் தமிழர் பயன்படுத்திய பொருளாகும். சீப்பு என்னும் இந்த எளிய பொருளை விலை உயர்ந்த யானைத் தந்தத்தால் தமிழர் தயாரித்துப் பயன்படுத்தியுள்ளனர் என்பது கீழடி தமிழரின் செல்வ வளத்தைக் காட்டுகிறது. நுட்பமாக யானைத் தந்தத்தைக் கடைந்து சீப்பாக்கி உள்ளனர் தமிழர். தமிழரின் நுண்ணிய தொழில் நுட்பத்திற்கு இந்தச் சீப்பு மாபெரும் சான்றாகும்.

நெடுநல்வாடை என்னும் நூல் பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவியாகிய பாண்டிமா தேவிக்காக (அரசி) உருவாக்கப் பெற்ற கட்டிலானது, நாற்பது ஆண்டுகள் நிரம்பியதும், போர்த்தொழிலில் சிறப்புடையதும், போரிலே விழுப்புண் பட்ட இறந்த யானையின் தானாக விழுந்த தந்தத்தைக் கொண்டு அரசிக்கென செய்யப் பெற்ற கட்டிலின் கால்கள் உருவாக்கப்பட்டதாக நெடுநல்வாடை நவில்கிறது. இங்கு 40 ஆண்டுகள் என்பது ஆண் யானையின் சிறந்த வயதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. போரில் இறந்த யானையின் தந்தம் என்பது வீரத்தின் அடையாளமாகவும், யானை இறந்த பின்னரே தந்தத்தைக் கைப்பற்றுதல் என்னும் உயர் நேயத்தையும் விளக்குகிறது. இதனை,

> “தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்
> இகன்மீக கூறும் ஏந்தெழில் வரிநுதல்
> பொருதொழி நாக மொழியெயி நருகெறிந்து
> சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்
> கூருளிக் குயின்ற ஈரிலை யிடையிடுபு
> தூங்கியல் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
> புடைதிரண் டிருந்த குடத்த லிடைதிரண்டு
> உள்ளி நோன்முதல் பொருந்த அடியமைத்துப்
> பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்“
>
> (நெடுநல்வாடை : 115 123)

இப்பாடலடிகள் பண்டைத் தமிழரின் ஏராளமான வரலாற்றுக் குறிப்புகளைத் தாங்கி நிற்கின்றன.

தச நான்கு என்பது 10 பெருக்கல் 4 நாற்பது என்ற பெருக்கல் கணக்கினை முன்வைக்கிறது. நாற்பது ஆண்டுகள் என்பது ஆண் யானையின் சிறந்த இளமைப் பருவம் என்னும் உயிரியல் அறிவை வெளிப்படுத்துகிறது. சிறிய உளியைக் கொண்டு தச்சர்கள் யானைத் தந்தத்தைச் செதுக்கினர் என்பது



பண்டைத் தமிழகத்தில் சிறந்திருந்த தச்சுத் தொழிலை வெளிப்படுத்துகிறது. பாண்டில் என்ற சொல்லாட்சிக் கட்டிலைக் குறித்து நிற்கிறது.

கீழடியில் கிடைத்த பொருட்கள் கார்பன் சோதனைக்கு அனுப்பப்பட்டு அதன் காலத்தைக் கணித்திருப்பது. சிறப்பு. யானைத் தந்தத்தில் செய்யப் பட்ட சீப்பு, இந்த யானையின் எத்தனையாவது வயதில் அதன் தந்தத்தைப் எடுத்துச் செய்யப்பட்டது என்ற ஆய்வும் மேற்கொள்ளப்பட்டதால், நெடுநல் வாடை உரைக்கும் 40 வயது உடைய யானை என்னும் குறிப்பு பொருந்துகிறதா? என்பதை ஆராய உதவும். மேலும் இவ்வாய்வு தமிழரின் நுண்ணிய வாழ்வியலை வெளிப் படுத்துவது திண்ணம்.

நெடுநெல்வாடைப் பாடலடிகளில் இடம் பெறும் யானையின் தந்தத்தாலான கட்டிலின் கால்களும், கீழடியில் கிடைக்கப் பெற்றுள்ள யானைத் தந்தத்தால் ஆன நுட்பமான சீப்பும் இவை இரண்டும் ஒரே புள்ளியில் இணைகின்றன. இவை இரண்டும் பாண்டிய நாட்டில் மதுரைக்கருகில் பாடப்பெற்ற, கிடைத்த பொருட்களாகும். இவை இரண்டும் சங்க காலம் எனப்படும் சமகாலத்தவை. இங்கு நாம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய செய்தி, சங்ககாலத்தில் அரச குடியைச் சேர்ந்தோர் மட்டும் செல்வ வளத்தோடு வாழ்ந்து உயர்ந்த பொருட்களை (யானையின் தந்தத்தால் ஆன கட்டிலின் கால்கள்) பயன்படுத்த வில்லை.

பாண்டிய நாட்டில் வாழ்ந்த மக்களும் செல்வச் செழிப்போடு வாழ்ந்து, உயர்ந்த பொருட் களைப் (தந்தத்தால் ஆன சீப்பு) பயன்படுத்தியுள்ளனர் என்பது சிறிதும் ஐயத்திற்கு இடமின்றி வெளிப்பட்டு நிற்கிறது. இதன் மூலம் செம்மார்ந்து ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களையும், தமிழர் பண்பாட்டின் உச்சத்தையும் அறிய முடிகிறது.




# இஸ்லாமிய நாடுகள்

முஸ்லிம் நாடுகள் அனைத்தும் மதம் சார்ந்த நாடுகள் என்ற பொய்யை மதவெறி கொண்ட பாசிச பயங்கரவாதிகள் தொடர்ந்து செய்தி பரப்பி வருகின்றனர்...

ஆனால் உண்மையில் எத்தனை "முஸ்லிம் நாடுகள் மதச்சார்பற்றவைகள்" என்பதற்கான ஆதாரம் இதோ...!

துருக்கி 96% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 4% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது £https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Turkey

இந்தோனேஷியா 90% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 10% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Indonesia

அஜர்பைஜான் 93% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 7% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Azerbaijan

கஜகஸ்தான் 70% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 30% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது. https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Kazakhstan

அல்பேனியா 58% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 42% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது.https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Albania

லெபனான் 54% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அரபு நாடு ஆனால். இன்றும் 46% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Lebanon

தஜிகிஸ்தான் 98% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 2% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Tajikistan

துர்க்மெனிஸ்தான் 89% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 11% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Turkmenistan

கிர்கிஸ்தான் 86% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 14% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Islam_in_Kyrgyzstan

உஸ்பெக்கிஸ்தான் 96% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 4% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Religion_in_Uzbekistan

கொசோவோ 95%இஸ்லாமியர்களை பெரும்பான்மையாக கொண்ட நாடு ஆனால், இன்றும் 5% சிறுபான்மையினருக்காக மத சார்பற்ற நாடாகவே இருக்கிறது.

https://en.m.wikipedia.org/wiki/Kosovo

டிஜபௌடி/ Djibouti 96% இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடு ஆனால், இன்றும் 4% சிறுபான்மையினருக்காக மதச் சார்பற்ற நாடாகவே இருக்கிறது

https://en.m.wikipedia.org/wiki/Djibouti

எகிப்து நாடும் மதச்சார்பற்ற நாடு என்பதும் உலகிற்கே தெரியும்..

இந்த நாடுகள் அனைத்தும் மதச்சார்பற்ற, ஜனநாயக நாடுகளாக அறிவித்து இருக்கிறது! இந்த நாடுகளில் எந்த ஒரு மத கலவரங்களும் நடந்ததாக வரலாறு இல்லை. இஸ்லாமியரை பெரும்பான்மையாக 100% கொண்ட நாடுகள் மற்றும் சில நாடுகளே இஸ்லாமிய நாடாக அறிவித்து இருக்கிறது.

ஆனால் அதேபோல் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருந்தும் மதச்சார்பற்ற நாடுகளும் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டால் நல்லது!

# நம்பிக்கைகளின் எழுதுகோல்

பாவலர் **நா. இராசாரகுநாதன்**



இயேசுவை
சிலுவையில் அறைந்த
நம்பிக்கைகள்.

நபியின் மேலே
கற்களை வீசிய
நம்பிக்கைகள்.

காந்தியின்
மார்பைத் துளைத்த
நம்பிக்கைகள்.

கோபர்நிக்கசை
எரித்துச் சாம்பலாக்கிய
நம்பிக்கைகள்

கலிலியோவை
மண்டியிடச்செய்த
நம்பிக்கைகள்

தொப்புள் கொடிகளுள்
சாதியைச் செறுகிய
நம்பிக்கைகள்

வாழிடங்களைக் கொளுத்தியும்
வழிபாட்டிடங்களை
இடித்தும்
சக உயிர்களைத்
துன்புறுத்தியும்
எக்காளமிட்டுச் சிரிக்கும்
நம்பிக்கைகள்.

பெரும்பான்மை
நம்பிக்கைகளின் நிழலில்
இளைப்பாறிக் கொள்(ல்)கின்றன
அதிகாரங்கள்

தவறிழைக்கும்
அதிகாரங்கள்
அநீதிகளை மறைக்கும்
அரிதாரங்களுக்கு
பசையிடுகின்றன
நம்பிக்கைகள்.

நம்பிக்கைகளின்
பேரிரைச்சலில்
நியாயங்களின் குரலொளி
கரைந்து விடுகிறது.

கொலைக் கருவிகள்
யாவற்றினும் கொடிது
நியாயங்களைக் கொல்லும்
நம்பிக்கைகளின் எழுதுகோல்!!!...

# வரலாற்றை மறப்பவர்களை வரலாறு தண்டிக்கும்

## சங்கிகளை கிழித்து எறிந்து

## CPI(M) ஸ்வராஸ் MLA.,



31.12.2019 அன்று கேரள சட்டமன்றத்தில் தேசிய குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு எதிராக வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, DYFI முன்னாள் கேரள மாநிலக்குழு செயலா ளரும், CPIM கேரள மாநிலக்குழு உறுப்பினரும், CPIM திர் பூணித்துறை சட்ட மன்றத் தொகுதி உறுப்பினருமான தோழர். எம்.ஸ்வராஜ் ஆற்றிய, அனைவரது கவனத்தையும் ஈர்த்த உரையின் தமிழாக்கம்.

(இந்த உரை இந்திய குடிமக்கள் என்ற முறையில் அனைவராலும் கேட்கப்பட வேண்டிய, படிக்கப் படவேண்டிய, தலைமுறைகள் கடந்தும் நினைக்கப் படவேண்டிய உரை)

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாஜக ஆகியவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மதச்சார்பற்ற தன்மையை ஒழிக்க முயல்கின்றன. குடியுரிமைச் சட்டம் குறித்த பொய்யான வதந்திகளை, சங்க பரிவார் இப்போது இந்தியா முழுவதும் திட்டமிட்டு பரப்புகிறது.

இன்றைய இந்தியாவில் சங்க பரிவார் அமைப்புகள் அப்பட்டமான பொய்களின் உதவியின்றி தாக்குப் பிடித்து நிற்க முடியாது என்பது இந்திய மக்கள் யாவரும் அறிந்த உண்மை. குடியுரிமைச் சட்டத்தையும் (CAA) குடியுரிமைப் பதிவேட்டையும் (NRC) ஒன்றாக இணைத்து பார்க்கும்போது தான் முழுமையான உண்மை வெளிவருகிறது.

இந்திய மண்ணில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும், இந்தியாவின் முதல்

**இங்கு வசிக்கும் மக்களிடம் ஆதாரங்களை கேட்கிறார்கள். இந்த மண்ணில் பல ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருபவர்களிடம், அவர்களின் குடியுரிமை பற்றி சந்தேகம் கொண்டு கேள்வி கேட்கிறார்கள். எல்லா மதப் பிரிவினர்களிலும் எத்தனை எத்தனை தீரம் மிக்க தியாகிகள் உள்ளனர்? கேரளாவில் எத்தனை அனுபவங்கள் உள்ளன?**

குடிமகனான ஃபக்ருதீன் அலி அகமது அவர்களின் குடும்பத்தினர் எப்படி இந்தியர் அல்லாதவர் ஆனார்கள்? இதற்கெல்லாம் நீங்கள் பதிலளிக்க வேண்டும். நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் திரளை வேண்டுமென்றே தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்ல, திட்டமிட்டு இயற்றப்பட்ட சட்டம் இது.

மரியாதைக்குரிய, பாஜக (நேமம் தொகுதி) சட்டமன்ற உறுப்பினர் ராஜகோபால் அவர்கள், தனது 90 வயதில் கூட, மனிதகுலத்தின் மீது அன்பு செலுத்தத் தகுந்த ஒரு வார்த்தையை உச்சரிக்க முடியாவிட்டால், உங்கள் அரசியல் எவ்வளவு இழிவானதும் வன் முறையானதும் என்பதை அடையாளம் கண்டுபிடித்து, அதைக்கண்டு அச்சமடைகிறோம்.

இங்கு வசிக்கும் மக்களிடம் ஆதாரங்களை கேட்கிறார்கள். இந்த மண்ணில் பல ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருபவர்களிடம், அவர்களின் குடியுரிமை பற்றி சந்தேகம் கொண்டு கேள்வி கேட்கிறார்கள். எல்லா மதப் பிரிவினர் களிலும் எத்தனை எத்தனை தீரம் மிக்க தியாகிகள் உள்ளனர்? கேரளாவில் எத்தனை அனுபவங்கள் உள்ளன?

முஸ்லீம் சமூகத்தை அழித்து ஒழிக்கும் நோக்கில் உள்ள இந்தச் சட்டத்தை நீங்கள் உருவாக்கும் போது, கேரளாவின் மலபாரில் நடந்த சுதந்திர போராட் டத்தின் வரலாற்றை ஆராய்ந்தீர்களா? எத்தனை எத்தனை அனுபவங்கள் அங்கே உள்ளன?

1852இல் பிரிட்டனுக்கு நாடு கடத்தப்பட்ட சையத்ஃபசல் பூக்கோயா தங்கள் அவர்களின் பெயரை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? மாப்றம் என்ற இடத்தைப் பற்றி உங்களுக்குத் தெயுமா? வாழக்காடு அருகே கொந்நாரா மக்காம் இன்றும் கூட ஒரு வரலாற்று அடையாளமாக நிற்கிறது. அது அக்காலத்தில் மசூதியாக இருந்தது. அந்த மசூதி ஆங்கிலேயர்களால் வெடி வைத்து தகர்க்கப்பட்டது ஆகும்.

அது அக்காலத்தில் சுதந்திரப் போராட்டத்தின் மையமாக இருந்தது. இன்றும் அந்த பாதையில் கடந்து செல்லும்போது, ஆங்கிலேயர்கள் சுட்டபோது, பாய்ந்து பதிந்த தோட்டாக்கள். அகற்றப்படாமல் கொந்நாரா மக்காமின் சுற்றுச் சுவற்றில் இருப்பதை நம்மால் பார்க்க முடியும்.

அங்கிருந்து பலப்பிரயோகம் செய்து சையத் முகமது கோயா, ஆங்கிலேயர்களால் வலுக்கட்டாயமாக கோயம்புத்தூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

வாரியங்குந்நத்து குஞ்சஹம்மது ஹாஜி என்ற பெயரை நீங்கள் கேள்விபட்டிருக்கிறீர்களா? பிரிட்ட னின் இராணுவ ஆதிக்கத்திற்கு எதிராக சவால் விடுத்து, அந்த மண்ணின் மைந்தர்களின் சொந்த தேசத்தை நிறுவியர் அவர். அவர் தனது குடியரசிற்கு மலையாள தேசம் என்று பெயரிட்டார்.

ஆங்கிலேயர்கள் அடக்குமுறையை ஏவி அவரை ஒடுக்கினர். மிருகத்தனமான அடக்குமுறைக்கு ஆளாக்கி தண்டித்தனர். மீசையின் ரோமங்கள் ஒவ்வொன்றும் இழுத்து பிடுங்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்திய பிறகு இறுதியாக அவருக்கு சலுகை ஒன்றை ஆங்கிலேயர்கள் முன்வைத்தார்கள். சுதந்திரப் போராட்டத்திலிருந்து விலகி, மன்னிப்புக்கடிதம் ஒன்றை எழுதித்தருவதானால், உங்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும், அதன் மூலம் நீங்கள் மக்காவில் நிம்மதியாக வாழ அனுமதிக்கப்படுவீர்கள். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து தரும் என்று ஆங்கிலேயே இராணுவ தளபதி கூறினார்.

இந்த சலுகையை கேட்டதும், சித்திரவதையால் உடல் தளர்ந்து போன நிலையிலும், புன்னகை மாறாத முகத்துடன் வாரியம் குந்நத்து குஞ்ஞகமது ஹாஜி எவ்வாறு பதிலளித்தார் தெரியுமா?

"எனக்கு மக்காவை ரொம்பப் பிடிக்கும் ஆனால் நான் மக்காவில் பிறக்கவில்லை. போராட்ட வரலா றுகள் நிறைந்த ஏறநாடு என்ற இந்த மண்ணில்தான் பிறந்தேன் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நான் இந்த மண்ணில் இறந்து வீழ்வேன். இந்த மண்ணுடன் இரண்டறக்கலந்து போவேன்". என்று தான் அவர் வீரத்துடன் கூறினார்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. "நான் பிறந்த இந்த நாட்டிற்காக தியாகியாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது" என்று கூறினார். அவரது விருப்பப்படி பின்னாலிருந்து சுட்டு கெள்வதற்குப்

பதிலாக, முன்னால் இருந்து துப்பாக்கியால் மார்பில் சுடப்பட்டு, கொல்லப்பட்டார்.

அக்காலத்தில் தண்டனை பெற்றவர்களின் கண்கள் கட்டப்பட்டு, பின்னாலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால், குந்நத்து குஞ்ஞகமது ஹாஜியின் இறுதி ஆசை என்ன என்று கேட்ட போது, “நீங்கள் என் கண்களை கட்டக்கூடாது, என்னை முன்னால் இருந்து சுட வேண்டும்“ என்று வீரத்துடன் கூறிய துணிச்சலான மனிதர்களின் நிலம் தான் நமது நாடு.

இது ஆலிமுஸ்லியார் போன்ற வீரர்களின் மண். சுதந்திரப் போராட்டத்தின் எல்லா காலகட்டத்திலும் பிரிட்டிஷ் இராணுவத்துடன் சாதாரண பொதுமக்கள் நேருக்கு நேர் மோதிய வரலாறு. இன்றைய மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பூக்கோட்டூர் என்ற இடத்தில் நடந்தது. அந்தப் போரை நினைவு கூரும் நினைவிடும் இன்றும் அந்த ஊரில் உள்ளது. பிரிட்டிஷ் இராணுவத்தை தோற்கடித்த பெருமைக்குரியவர்கள் தான் ஏறநாட்டின் மாப்பிளை வம்சத்தினர். அந்த கம்பீரமான கடந்த கால வரலாறு நிலவும் நமது சமூகத்தில்தான், அந்த வரலாற்றுக்கு சொந்தக்காரர் களான மக்களை சந்தேகத்தின் நிழலில் வைத்திருக்கும் அணுகுமுறையை நீங்கள் எடுக்கிறீர்கள்.

1935இல் ஹிட்லர் யூதர்களைக் கொல்ல அழித்தொழிப்பு மையங்களை உருவாக்கி, இலட்சக் கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தான். சரியாக பத்தாவது வருடம் தற்கொலை செய்து கொண்டு சாகும் நிலைக்கு தள்ளப்பட்டான் என்பது கடந்த கால பாசிசத்தின் வரலாறு.

இலட்சக்கணக்கான மனிதர்களைக் கொன்ற ஆஷ்ச்விட்ஸில் உள்ள அக்கால வதை முகாம், பின்னர் போர்நினைவு அருங்காட்சியகமாக மாறியது. அதன் நுழைவாயிலில், “வரலாற்றை மறந்தவர்களை வரலாறு தண்டிக்கும்“ என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதே தான் இன்றைய காலகட்டம். நரேந்திர மோடியிடம், வரலாற்றை மறப்பவர்களை வரலாறு தண்டிக்கும் என்று கடந்த கால வரலாற்றை நினைவு படுத்துகிறது. வரலாறு தண்டிக்கும் என்பதில் சந்தேகம் ஏதும் கொள்ளத்தேவை இல்லை.

அகதிகளை, மதத்தைக் கருத்தில் கொள்ளாமல் மனித நேயத்தைக் கணக்கில் கொண்டு ஏற்க வேண்டும். குடியுரிமை திருத்தச் சட்டம் உலக அரங்கில் இந்தியாவை அவமானப்படுத்தும், இந்தியா தனிமைப்படுத்தப்படும்.

முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்காக இந்தச் சட்டம் இப்போது வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது என்றாலும், இது முஸ்லிம்களை மட்டும் பாதிக்கும் பிரச்சினை அல்ல. இது ஒரு துவக்கம் மட்டுமே. நாளை சிறுபான்மையினர், தலித்துகள் மற்றும் எதிர்க்கருத்து பேசுபவர்களுக்கு எல்லாம் எதிராக, ஆட்சியா ளர்களால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களின் ஒரு முன்னோட்டமாகும்.

இது முஸ்லிம்களை மட்டும் பாதிக்கும் பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த இந்தியாவையும் பாதிக்கும் பிரச்சினை. மதச்சார்பின்மையை பாதிக்கும் பிரச்சினை. அந்த கண்ணோட்டத்தில் இந்த சட்டத்தை பார்க்க நாம் முயல வேண்டும்.

அனைத்து மதச்சார்பற்ற மக்களும் ஒன்றிணைந்து மனிநேயம் என்ற கருத்தை நிலைநிறுத்துவதன் மூலம், தீய பின்விளைவுகளை ஏற்படுத்தும் இந்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டும்.

இந்த நாட்டைச் சாகடிக்க முயலும் சக்திகளுக்கு எதிராக நாம் போராடுகிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்திறகு எதிராகச் செயல்படும் மத்திய அரசுக்கு எதிரானது அந்த போராட்டத்தின் போது நாம் ஏந்த வேண்டிய கொடி, நமது தேசியக்கொடி ஆகும். நாம் ஒன்றுபட வேண்டும். இந்திய நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.

தோழர் **எம். ஸ்வராஜ்** எம்.எல்.ஏ
CPIM

**இலட்சக்கணக்கான மனிதர்களைக் கொன்ற ஆஷ்ச்விட்ஸில் உள்ள அக்கால வதை முகாம், பின்னர் போர்நினைவு அருங்காட்சியகமாக மாறியது. அதன் நுழைவாயிலில், “வரலாற்றை மறந்தவர்களை வரலாறு தண்டிக்கும்” என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதே தான் இன்றைய காலகட்டம். நரேந்திர மோடியிடம், வரலாற்றை மறப்பவர்களை வரலாறு தண்டிக்கும் என்று கடந்த கால வரலாற்றை நினைவு படுத்துகிறது. வரலாறு தண்டிக்கும் என்பதில் சந்தேகம் ஏதும் கொள்ளத்தேவை இல்லை.**

# தமிழ்நாட்டுக்கு
# “குடிமக்கள் பதிவேடு” வேண்டும்!




**கி. வெங்கட்ராமன்**

இந்தியா முழுவதும் இந்தியக் குடிமக்களைக் கணக்கெடுக்கும் “தேசிய குடிமக்கள் பதிவேடு” (என்.ஆர்.சி.) செயல்படுத்தப்படும் என இந்திய உள்துறை அமைச்சர் அமித்சா நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இங்கு வாழும் மக்களில் இந்திய நாட்டுக் குடிமக்கள் யார் என்பதற்கான பதிவேடு குடிமக்கள் பதிவேடாகும்.

ஏற்கெனவே, அசாமில் “தேசிய குடிமக்கள் பதிவேடு” செயல்படுத்தப்பட்டு, மண்ணின் மக்கள் யார், அயலார் யார் எனக் கணக்கெடுக்கப்பட்டு வரும் நிலையில்தான், இந்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஆங்கிலேயர் காலத்திலிருந்தே வடகிழக்கு மாநிலமான அசாமின் வளமான ஆற்றுப்பாசனப் பகுதிகளில் நிலங்களை வாங்கிக் கொண்டு, வங்காளிகள் குடியேறத் தொடங்கிய நிலையில், 1950களுக்குப் பிறகு மேற்கு வங்கத்திலிருந்தும், மேற்கு பாக்கித்தானிலிருந்தும் வங்காளிகள் அலை அலையாக அசாமில் குடியேறினர். பீகார் இந்திக்காரர்களும் குடியேறினர். முஜிபுர் இரகுமான் தலைமையில் வங்கதேச விடுதலைப் போராட்டம் தீவிரமான பிறகு அங்கிருந்து அசாமுக்குள் வருவோரின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தது.

இதன் காரணமாக, “அசாம் அசாமியருக்கே! வெளியாரை வெளியேற்று!” என்று முழங்கி அசாமின் மாணவர்களும் அசாமியர்களும் பெரும் போராட்டங்களில் இறங்கினர். இதன் காரணமாக, 1971 மார்ச் 24-க்குப் பிறகு அசாமில் குடியேறிய அயலார் அனைவரும் கணக்கெடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள் என்று கூறும் “அசாம் ஒப்பந்தம்” அசாம் மாணவர் தலைவர் களுக்கும் (All Assam Students Union - AASU), இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ்காந்திக்கும் இடையே 1985ஆம் ஆண்டு கையெழுத்தானது.

எனினும், இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

அசாமில் உள்ள சிக்கல், அங்கு குடியேறியவர்கள் இந்துவா - இசுலாமியரா என்பதல்ல; அசாமியரா, அசாமியர் அல்லாதவரா என்பதே! ஆனால், 2001இல் ஆட்சிக்கு

வந்த வாச்பாயி தலைமையிலான பா.ச.க. அரசு, அதை இந்து - இசுலாமியர் சிக்கலாக்கியது.

இந்நிலையில், 2013இல் அசாம் அமைப்புகள் தொடுத்த வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் 1985ஆம் ஆண்டு கையெழுத்தான அசாம் ஒப்பந்தப்படி, அசாமில் அயலாரைக் கணக்கெடுத்து வெளியேற்ற "தேசியக் குடி மக்கள் பதிவேடு" மேம்படுத்தப்பட வேண்டுமென ஆணையிட்டது. அது சரிவர செயல்படுத்தப்படாத நிலை யில், உச்ச நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் அக்கணக்கெடுப்பை நடத்த 2016 திசம்பரில் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அசாமில் வாழும் மக்கள், இத்தீர்ப் பாயங்களில் தங்கள் குடியுரிமையை மெய்ப்பிக்க 19 ஆவணங்களில் ஒன்றை எடுத்து வர வேண்டுமெனக் கேட் கப்பட்டன.

இக்கணக்கெடுப்பின் முடிவில், அசாமில் பெருமள வில் குடியேறியுள்ளவர்கள் இசுலாமியர்களே என்ற பா.ச.க.வின் வாதம் பொய்யானது. ஏனெனில், அசாமின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் "அசாமியர் அல்லாத அயலார்" எனக் கணக்கெடுக்கப்பட்ட 19 இலட்சம் பேரில் வெறும் 5 இலட்சம் பேர்தான் இசுலாமியர்கள். மீதமுள்ள 14 இலட்சம் பேர், வங்காளதேச, மேற்கு வங்கம், பீகார் உள்ளிட்ட பிற மாநிலங்களைச் சேர்ந்த இந்துக்கள் ஆவர். இந்து பாதுகாவலராக காட்டி வந்த பா.ச.க.வுக்கு இதுவொரு புதிய சிக்கலை ஏற்படுத்தியது.

எனவே, "வங்கதேசத்திலிருந்து வந்தேறிய பெரும் பான்மை இசுலாமியர்" என்ற தங்கள் கூற்றை மெய்ப் பிக்கும் நோக்கில் வங்கதேசத்தை ஒட்டி நிலப்பரப்பைக் கொண்டுள்ள பீகார், மேற்கு வங்கம் போன்ற மாநிலங் களிலும் இக்கணக்கெடுப்பை நீட்டிப்பு செய்யும் எண்ணத் திற்கு பா.ச.க. வந்தது. தங்களுக்கேற்ப சில மாநிலங்களில் மட்டும் இதைக் கொண்டு வந்தால் எதிர்ப்பு வரும் என்பதை உணர்ந்து, இப்போது இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் "தேசியக் குடிமக்கள் கணக்கெடுப்பு" நடத்தப்படும் என பா.ச.க. அரசு தடாலடியாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அசாமில் குடிமக்கள் பதிவேடு பதிவது போல், தமிழ் நாட்டுக்கும் வேண்டும் என தமிழ்த்தேசியப் பேரியக்கம் தொடர்ந்து கோரி வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தரை, வங்கதேசத்திலிருந்து குடியேறி வந்தவர்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. ஏதிலிகளாக இங்கு வந்த தமிழீழத் தமிழர்கள் கிட்டத் தட்ட அனைவருமே சட்டப்படியான ஏதிலியர் ஆவர். அவர்களை யாரும் சட்டப் புறம்பாகப் புலம் பெயர்ந் தோர் இல்லை!

இங்குள்ள சிக்கல் என்பதே, ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கில் வடமாநிலங்களிலிருந்தும், பிற மாநிங்களிலிருந்தும் தமிழ்நாட்டிற்குள் குடியேறிக் கொண்டுள்ள வெளி மாநிலத்தவர்கள்தாம்!

ஏற்கெனவே நாகாலாந்து, மிசோரம், அருணாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் "உள் அனுமதிச் சீட்டு"

**தமிழ்நாட்டைப் பொறுத்தரை, வங்கதேசத்திலிருந்து குடியேறி வந்தவர்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. ஏதிலிகளாக இங்கு வந்த தமிழீழத் தமிழர்கள் கிட்டத் தட்ட அனைவருமே சட்டப்படியான ஏதிலியர் ஆவர். அவர்களை யாரும் சட்டப் புறம்பாகப் புலம் பெயர்ந்தோர் இல்லை! இங்குள்ள சிக்கல் என்பதே, ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கில் வடமாநிலங்களிலிருந்தும், பிற மாநிங்களிலிருந்தும் தமிழ்நாட்டிற்குள் குடியேறிக் கொண்டுள்ள வெளிமாநிலத்தவர்கள்தாம்!**

(Inner Line Permit) முறை இருக்கிறது. இதன்வழியே, தங்கள் மாநிலத்தில் யார் நுழைகிறார்கள், யார் போகி றார்கள் என்றெல்லாம் அவர்களால் தெரிந்து கொள்ள முடிவதுடன், வெளியார் குடியேற்றத்தையும் அவர்கள் தடுத்து நிறுத்தித் தங்கள் தாயகத்தைத் தற்காத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால், தமிழ்நாட்டின் நிலைமை மிகமிக மோசமானது!

கடந்த 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் சற்றொப்ப 44 இலட்சம் பேர் வெளி மாநிலத்தவர்கள் ஆவர். இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்த பொருளி யல் அறிக்கையில், 2001-க்கும் 2011-க்கும் இடையில் தமிழ்நாட்டின் அயல் மாநிலத்தவர் எண்ணிக்கை கடந்த கணக்கெடுப்பைவிட 36 மடங்கு அதிகரித்துள்ளது என்ற அபாய அறிவிப்பை வெளி யிட்டது.

எனவே, இன்றுள்ள நிலவரப்படி, சற்றொப்ப 1 கோடி வெளி மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் குடியேறி யுள்ளனர். சென்னை, கோவை, திருப்பூர் போன்ற தொழில் வளர்ச்சி மாவட்டங்களில் தான் இவர்களின் குடியேற்றம் அதிகமாக உள்ளது.

இந்திய விடுதலைக்குப் பிறகு 1951இல் நடைபெற்ற முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது, "தேசிய குடிமக்கள் பதிவேடு" முதன் முதலாக எடுக்கப்பட்டது. அதன்பிறகு, 1956இல் மொழிவழி மாநிலங்களாக இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டன. மொழிவழி தேசிய இனத் தாயகங்களாக இம்மாநிலங்களை உறுதி செய்வ தற்கு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டம் உறுதி கூறியது. இந்நிலையில், 1956 நவம்பர் 1-க்குப் பிறகு, தமிழ்நாட்டிற் குள் வந்த அயலார் குறித்த கணக்கெடுப்பு தேவைப்

படுகிறது. புலம் பெயர்ந்தோர் குறித்த விவரங்கள் 1961 மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் இல்லை.

இவற்றின் காரணமாக, 1956 நவம்பர் 1-க்குப் பிறகு தமிழ்நாட்டிற்குள் வந்தோர் குறித்த கணக்கெடுப்புடன் "குடிமக்கள் பதிவேடு" தேவை என்று நாம் கூறுகிறோம்.

இப்போது, இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் "ஆதார்" அட்டை என்பது "குடியுரிமைக்கான அடையாள அட்டை அல்ல" என்ற அறிவிப்போடுதான் வழங்கப்பட்டு வருகிறது. அன்றைக்கு அவர் எங்கு குடியிருக்கிறார் என்பதற்கான ஆதாரம் மட்டுமே அது! ஆனால், இந்த அட்டைகளின் வழியே அவர்களுடைய மரபான வாழ்விடம் எதுவென கண்டறிய முடியாத நிலை இருக்கிறது.

அசாமில் தான் நினைத்ததற்கு மாறாக வெளியேற்றப் பட வேண்டிய அயலார் கணக்கில் பெரும்பாலோர் இந்துக்கள் என வந்ததற்குப் பிறகு, இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்து, அதன்பிறகு "தேசிய குடிமக்கள் பதிவேட்டை" செயல்படுத்தலாம் என பா.ச.க. அரசு திட்டமிடுகிறது.

"குடியுரிமைச் சட்டத்தில்" திருத்தம் (Citizenship Amendment Bill) முன்மொழிந்துள்ள இந்திய அரசு, பாக்கித் தான், ஆப்கானித்தான், வங்கதேசம், மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் புலம் பெயர்ந்த இந்துக்கள், கிறித்துவர்கள், பார்சிகள், பௌத்தர்கள், ஜைனர்கள் ஆகியோருக்குக் குடியுரிமை வழங்கும் வகையில் இத்திருத்தத்தை முன்வைக்கிறது.

புலம் பெயர்ந்த இசுலாமியர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க முடியாது எனக் கூறுகிறது.இவ்வாறு புதிய குடியுரிமை வழங்குவதற்கு 2008ஆம் ஆண்டை வரையறுப்பு ஆண்டாக வைத்துக் கொள்கிறது. 2008லிருந்து 2014ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிற்குள் வந்த இசுலாமியர் அல்லாதவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்காகவே இச்சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

ஆனால், இந்தப் பட்டியலில் இலங்கை இல்லை!

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் கீழ் இனப் படுகொலைக்கு உள்ளானவர்கள் இந்துக்களே ஆயினும், கிறித்துவர்களே ஆயினும் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க ஆரிய இந்திய அரசு விரும்பவில்லை!

சிங்கள பௌத்த இனவெறி அரசின் இனப்படு கொலைக்கு அஞ்சி, தமிழ்நாட்டில் கணிசமான எண்ணிக்கையில் தமிழீழ மக்கள் ஏதிலியராகத் தங்கியுள்ளனர். "தேசிய குடிமக்கள் பதிவேடு" கணக்கெடுப்பில், அவர்களையும் இணைத்து அவர்களில் விரும்புவோருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கியும், விருப்பமில்லாதவர்களுக்கு "ஏதிலியர்" தகுதி வழங்கியும் அவர்களை அங்கீகரிக்க வேண்டும். "சிறப்பு முகாம்" என்ற பெயரில், தமிழீழத் தமிழர்கள் மட்டுமின்றி எந்தவொரு வெளிநாட்டவரையும் அடைத்து வைத்து சித்திரவதை செய்யக் கூடாது!

அசாமில் இறுதிக் கணக்கெடுப்பில் குடிமக்கள் பதிவேட்டில் இடம் பெற முடியாதவர்களை தனி முகாமில் அடைத்து வைக்கக் கூடாது! வங்கதேசத்தவரை அந்நாட்டுக்குத் திருப்பி அனுப்பிட ஏற்பாடு செய்ய வேண்டும். பிற மாநிலத்தவரை அவரவர் மாநிலங்களுக்கு அனுப்பிவிட வேண்டும்.

தமிழ்நாட்டில் 1956 நவம்பர் 1-ஐ வரம்பு நாளாகக் கொண்டு, "இந்தியக் குடிமக்கள் பதிவேடு - தமிழ்நாடு" உருவாக்கப்பட வேண்டும். 2020இல் அடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப் போகிறார்கள். அப்போதே, குடிமக்கள் வரைவுப் பதிவேட்டையும் அணியப்படுத்திவிட முடியும். தனியே கணக்கெடுக்க வேண்டியதில்லை. அதேநேரம், மோடி அரசு முன் வைத்துள்ள குடியுரிமை சட்டத் திருத்தத்தைக் கைவிட வேண்டும். அது, மதச்சார்பின்மை என்ற அரசமைப்புச் சட்டத்திற்கே எதிரானது!

இவ்வாறு, வரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் "இந்தியக் குடிமக்கள் பதிவேடு - தமிழ்நாடு" எடுத்ததற் குப் பிறகு, வடமாநிலத்தையும், வெவ்வேறு மாநிலத்தையும் தங்கள் மரபு வாழிடமாகக் கூறும் வெளி மாநிலத்து இந்தியக் குடிமக்களை அவரவர் மாநிலத்திற்கு திரும்ப அனுப்ப தீர்ப்பாயம் போன்ற கட்டமைப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்பதிவேட்டின்படி, "அயல் மாநிலத்தவர்" எனக் கண்டறியப்பட்ட யாருக்கும் வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை வழங்கக் கூடாது.

அலை அலையாக தமிழ்நாட்டிற்குள் வரும் வெளி மாநிலத்தவர்கள் தமிழர்களின் வேலை - தொழில் - கல்வி வாய்ப்புகளை பறிப்பதோடு, தமிழர் தாயகத்தின் இருப்புக்கே பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள். அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டு அரசியலிலும் குறுக்கிடுகிறார்கள்.

இப்போதே, தமிழ்நாட்டின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் பேர் வரை வெளி மாநில வாக்காளர்கள் இருக்கின்றனர். தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும் சிறுபான்மை வாக்காளர்களாக அவர்கள் வந்து விட்டனர். என்னதான் தமிழ்நாட்டு மாநிலக் கட்சிகளான தி.மு.க. - அ.தி.மு.க. ஆகியவை இனத்துரோகம் செய்து, வடஇந்தியாவுக்குத் தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுத்தாலும், வடநாட்டு வாக்காளர்கள் பா.ச.க.வைத் தான் ஆதரிப்பார்கள். காங்கிரசுகூட அவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான்! மாநிலக் கட்சிகளை அவர்கள் ஆதரிக்கவே மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு வாக்காளர் அட்டை வழங்கக் கூடாது என்கிறோம்.

மொழிவழி தேசிய இனத் தாயகமாக தமிழ்நாட்டை தற்காத்துக் கொள்ள தமிழ்நாட்டில் "தேசிய குடிமக்கள் பதிவேடு" நடத்தப்பட வேண்டும் என தமிழ்த்தேசியப் பேரியக்கம் கோருகிறது! மாறாக, குடிமக்கள் திருத்தச் சட்டத்தை நிராகரிக்கிறது!

●

# தமிழி என்பதோ, தாமிழி என்பதோ சரியல்ல!

# பண்டைத் தமிழ் எழுத்து என்பதே சரியானது!



***மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே!***

பணிவார்ந்த வணக்கம்!

கடந்த 29.04.2010 - “இந்து” நாளிதழின் முதல் பக்கத்தின் இறுதியில் வெளியாகியுள்ள செய்தியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இரவிக்குமார் “பிராமி” எழுத்தைத் “தமிழி” என்று அழைக்கலாம் என்று கூறிய கருத்துக்குக் “கல்வெட்டுகள் புத்த பிராமி, அசோகன் பிராமி, மௌரிய பிராமி என்று பகுக்கப் பெற்றுள்ளதாகவும், “இலலித விசுக்தரம்” என்னும் புத்த சமய நூல் “திராவிடி” என்று அழைத்துள்ளது என்றும் கூறிவிட்டு, ஐராவதம் மகாதேவன் போன்ற கல்வெட்டாய்வாளர்கள் “தமிழ் பிராமி” என்பதைத் “தமிழி” என மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை யென்றும் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விடையளித்திருக்கிறார்.

இதுபற்றிய எமது தாழ்மையான கருத்தைப் பணிந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுபற்றி முதலில் மறைந்த தமிழறிஞர் சா. கணேசன் கூறியுள்ளதைக் காணலாம்.

“தமிழகத்தில் உள்ள எழுத்துகளைப் “பிரம்மி” என்று அழைத்தல் சரியா என்பது சிந்திக்கத்தக்கதாகும். சமண நூலில் காணப்படுவதுபோல் “தாமிழி” என்ற பெயர்தான் பொருத்தமானது என்று இரா. நாகசாமி கருதுகிறார். தமிழகத்தில் வழங்கிய எழுத்துக்குத் தமிழரல்லாதவர்கள் அவர்கள் மொழி மரபுக்கேற்பத் “தாமழ என்று பெயர் கூறலாம். ஆனால், நாம் நம் மரபுக்கேற்ப, “தமிழ் எழுத்து” என்று கூறுவதுதான் பொருத்தம் என்பதே என் அழுத்தமான கருத்து” என்று தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள “கல்வெட்டுக் கருத்தரங்கு” என்னும் நூலில் பக்கம் 52இல் தெளிவாக எழுதியிருக்கிறார்.

அதே கட்டுரையில் பக்கம் 53இல், “ஆதலால் அவர்கள் “திராமிடம்” என்றது தமிழையே குறிக்கும். சங்ககாலம் என்பது கிறித்துவாப்தத்தின் தொடக்கம் வரை நிலவிய காலம் எனலாம். அக்காலத்தே நிலவிய இருபெரும் நாகரிகங்கள் பிராகிருத நாகரிகமும், தமிழ் நாகரிகமுமே எனலாம். எனவே, தமிழ்மொழியை அக்காலத்தே எழுத உபயோகித்த எழுத்திற்குத் “தாமிழி” என்று வடபுலத்தார்



**தொல்லியலறிஞர் நடன. காசிநாதன்**
தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை மேனாள் இயக்குநர்

**அசோகனது கல்வெட்டுகளே "பிராமி" எனும் எழுத்தில் எழுதப்பெறவில்லை என்றிருக்கையில் தமிழ்நாட்டுப் பண்டைக் கல்வெட்டுகள் "தமிழ் பிராமி"யில் எழுதப் பெற்றிருக்கின்றன என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? "பிராமி" என்பது பேச்சுக்குரிய தெய்வமே தவிர எழுத்துக்குரிய தெய்வமில்லை. தமிழ்நாட்டில் காணப்பெறும் பழமையான கல்வெட்டுக்கள் "தமிழ்" எழுத்தில்தான் எழுதப் பெற்றுள்ளன என்று கொள்வதே சாலப்பொருத்தமாகும்.**

அழைத்தது நியாயமே. உண்மையாகப் பார்க்கப்போனால் அதைத் "தமிழ்" என்றே குறிக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

இரண்டாவதாக, நடுவணரசு கல்வெட்டுத் துறையில் சமற்கிருதப் பகுதியில் உயர் கல்வெட்டாய்வாளராகப் பணிபுரிந்த முனைவர் சங்கர நாராயணன் சமற்கிருத மொழியில் மிகச்சிறந்த அறிஞர். அப்பெரியார் "பிராமி" எழுத்து பற்றிக் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

"பதஞ்சலி" என்னும் சமற்கிருத எழுத்தாளர் "பிராமி" எனும் சொல்லை ஒரு "மருத்துவ மூலிகை" என்று கூறியிருக்கிறார். அமரகோசம் எனும் நூல் "பிராமி" என்பதை "வாக்குத் தெய்வம்" என்றும் "மருத்துவ மூலிகை" என்றும் பேசுகிறது. இதிகாச நூல்களிலும் மற்றும் புராணங்களிலும் "பிராமி" எனும் சொல் பலமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், அவை அது ஒரு எழுத்து என்ற முறையில் ஆளப்படவில்லை. "நாரதகமிருதி" எனும் நூல் எழுத்தைப் பிரமன் தோற்றுவித்தார் என்று கூறுகிறதேயொழிய, எழுத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்துக்களின் எண்ணத்தில் இந்த உலகமே பிரம்மாவால் தோற்றுவிக்கப் பட்டது என்று கருதப்பெறுகிறது. "பிராமி" எனும் சொல் எழுத்தைக் குறிப்பதாகச் சமண, பௌத்த இலக்கியங்களில் தவிர வேறு எந்த இலக்கியங்களிலும் குறிக்கப் பெறவில்லை.

பிறதோரிடத்தில், "இந்தியத் தத்துவ ஞானிகள், பேச்சைத்தான் தெய்வமாகப் போற்றினார்கள். எழுத்தை அல்ல" என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

ஆதலால் அசோகனது கல்வெட்டுகள் "பிராமி" எழுத்தில் எழுதப்பட்டுள்ளன என்று கருதுவதே தவறானதாகும். அம்மன்னனது கல்வெட்டுக்கள் "தர்மலிபி"யில் எழுதப் பெற்றிருப்பதாகக் கூறப் பட்டுள்ளது.

அசோகனது பெரும்பாலான கல்வெட்டுகள் எழுதப் பெற்றிருக்கும் எழுத்துக்குப் "பிராமி" என்ற பெயரைச் சூட்டியவர் பியூலர் என்ற வெளிநாட்டாரே ஆவார். அவர் இவ்வாறு இந்தப் பெயரைத் தந்திருப்பது ஐயத்திற்கு அப்பாற்பட்டதன்று என்றும் மேலும் அசோகன் கல்வெட்டு எழுத்துக்களுக்குப் "பிராமி" என்ற பெயர் தந்திருப்பது நம் வசதிக்காகவே தவிர அதுதான் உண்மை என்றல்ல என்றும் டி.பி. வர்மா எனும் வடநாட்டு அறிஞர் தெரிவித்திருக்கிறார்.

அசோகனது கல்வெட்டுகளே "பிராமி" எனும் எழுத்தில் எழுதப்பெறவில்லை என்றிருக்கையில் தமிழ்நாட்டுப் பண்டைக் கல்வெட்டுகள் "தமிழ் பிராமி"யில் எழுதப் பெற்றிருக்கின்றன என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? "பிராமி" என்பது பேச்சுக்குரிய தெய்வமே தவிர எழுத்துக்குரிய தெய்வமில்லை.

சமண நூல்களிலும் பௌத்த நூல்களிலும் குறிப்பிடுகிற அச்சொல் எகிப்து நாட்டின் "ஈரோகிளிப்" போன்று இந்திய நாட்டின் உருவ எழுத்தைக் (Pictograph) குறித்ததோ என்று டி.பி. வர்மா கருதுகிறார்.

மேற்கூறப்பெற்ற அனைத்துக் கருத்துக்களையும் கருதிப் பார்க்கையில் தமிழ்நாட்டில் காணப்பெறும் பழமையான கல்வெட்டுக்கள் "தமிழ்" எழுத்தில்தான் எழுதப் பெற்றுள்ளன என்று கொள்வதே சாலப் பொருத்தமாகும்.

தமிழ்நாட்டில் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் காணப்படுகின்றன. இவற்றுக்கான எழுத்து தமிழ் எழுத்தாகத்தான் இருக்கும். கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் (200 ஆண்டுகளுக்குப் பின்பு) அசோகன் தம் கல்வெட்டுகளுக்கான எழுத்தை (தர்மலிபியை) முதன் முதலில் உருவாக்கினான் என்று கருதப்பெறுகிறது. அவ்வாறிருக்கையில் அவனது கல்வெட்டுகளும் நம் தமிழ் எழுத்திலும் பிராகிருத மொழியிலும்தான் உள்ளன என்று கொள்வதே நடுநிலையாளர்களின் சரியான முடிவாக அமையும்.

ஆதலால், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், நம் தமிழ் மொழிக்குச் "செம்மொழி" என்ற பெருமையைப் பெற்றுத் தந்தது போன்று நம் தமிழ் நாட்டில் காணப்பெறும் பண்டைக் கல்வெட்டுக்கள் அனைத்தும் தமிழர்களின் எழுத்தான "தமிழ் எழுத்திலேயே" உள்ளன என்ற ஒரு முடிவை, விரைவில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அறிவித்துவிட வேண்டுமாய், தமிழார் வலர்களின் சார்பாகவும், தமிழ்மொழி மற்றும் தமிழ் எழுத்து ஆகியவை மீது நான் கொண்டுள்ள பற்று காரணமாகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

*(இதழ் மற்றும் தகவல் உதவி : குறிஞ்சிக்குமரன், பரமக்குடி).*



# இந்திய தேச வரலாறு இல்லை! இந்திய தேசங்களின் வரலாறே இருக்கிறது!

**– பெ.மணியரசன்**

வாரணாசி இந்துப் பல்கலைக் கழகத்தில் 17.10.2019 அன்று பன்னாட்டுக் கருத்த ரங்கு ஒன்றில் பேசிய இந்திய உள்துறை அமைச்சர் அமித்சா, “இந்திய வரலாற்றை ஆங்கிலேயர்கள் பார்வையில் எழுதியிருக்கிறார்கள். அதை இந்தியப் பார்வையில் திருத்தி எழுத வேண்டும்” என்றும் “அவ்வாறு நாம் திருத்தி எழுதுவதற்கு யாரும் தடை போடமுடியாது” என் றும் பேசியுள்ளார்.

எத்தனையோ சட்டங்களை நீக்கியும் மாற்றியும் எதேச்சதிகாரம் செய்து கொண்டிருக்கும் பா.ச.க. ஆட்சியாளர்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தையே முழுமையாக மாற்றி எழுதத் திட்டமிடுகிறார்கள். அதன் ஒரு பகுதியாக இந்திய வரலாற்றை திருத்தி எழுத முன்மொழிந்துள்ளார் அமித்சா.

திருத்தி எழுதப்படும் இந்திய வரலாற்றின் “ஞானகுரு” வாக விநாயக தாமோதர சாவர்க்கரை அடையாளம் காட்டியுள்ளார் அமித்சா. சாவர்க்கர்தான் 1923இல் முதன் முதலாக “இந்துத்துவா” என்ற சொல்லைக் கட்டமைத்து, இன்றைய ஆரிய பிராமணிய வகுப்புவாத அரசியலுக்கு வழிகாட்டியவர்.

மேலும் அமித்சா, இந்திய வரலாற்றில் வாழ்ந்த சிறப்புமிக்க மன்னர்களின் ஆட்சியைப் பற்றிக் குறிப் பிடும்போது சாணக்கியரை வழிகாட்டி ஆசானாகக் கொண்டு அமைக்கப்பட்ட மௌரியப் பேரரசு, புரோகி தர்களின் பொற்காலமாக விளங்கிய குப்தர்கள் ஆட்சி, தமிழ்நாட்டின் மீது படையெடுத்துப் பிடித்து ஆட்சி செய்த தெலுங்கு கன்னட விஜய நகரத் தளபதிகளின் ஆட்சி, பிராமண குருவின் உபதேசப்படி செயல்பட்ட மராட்டிய சிவாஜி ஆட்சி ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பட்டியலில் தமிழர்களின் சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சி பற்றி குறிப்பிடவில்லை. ஏன்? இமயத்தில் கொடியேற்றி வாழ்ந்தவர்கள் என்பதற்காக அவர்களை சேர்க்கவில்லையா? ஆரியத்துவாவின் அடிமைகளாக இல்லாமல் தமிழர்களின் அறிவு, வீரம், அறம் ஆகியவற்றோடு ஆட்சி செய்தார்கள் என்பதற்காக சேர்த்துக் கொள்ளவில்லையா?

கடந்த 2014இல் தமிழ்ப் பேரரசன் இராசேந்திர சோழனின் ஆயிரமாவது ஆண்டு விழாவை மோடி அரசு கொண்டாடி உலகத்திலேயே மிகப்பெரிய கடற்படையை வைத்திருந்தவன் இராசேந்திர சோழன் என்று பாராட்டியது. அதெல்லாம் அவ்வப்போது அவர்களின் திட்டத்திற்கேற்ப பயன்படுத்திக் கொள்ளும் தற்காலிகச் சொற்களா?

இந்தியா முழுவதையும் ஒரே தேசம் - ஒரே மதம் - ஒரே பண்பாடு - ஆனால் இரண்டு மொழி (இந்தி - சமற்கிருதம்) என்று மாற்றியமைத்திட செயல்படும் ஆர்.எஸ்.எஸ் - பா.ச.க. பரிவாரங்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தனித்தாயக ஆட்சியையும், வளர்ச்சி பெற்ற பல தாய்மொழிகளையும், பண்பாடுகளையும் இனங்களுக்கிடையே இருக்க வேண்டிய சமத்துவத்தையும் கொண்டுள்ள பல்வேறு தேசிய

**இந்தியா என்ற பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாடு இருந்ததே இல்லை! இந்தியத்தேச வரலாறு என்று எதுவுமில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேசங்களின் வரலாறுதான் இருக்கிறது என்பதை ஓங்கிச் சொல்வதுடன், அந்தந்த தேசிய இனமும் தனது சரியான புதிய இன வரலாற்றை எழுத வேண்டும்!**

இனங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கி - ஒற்றை ஆரிய தேசத்தை உருவாக்க எல்லா முனையிலும் செயல்படு கின்றன.

இந்த வெறிச்செயலில் பல்வேறு தேசிய இனங்களின் எஞ்சியிருக்கும் உயிரையும் பறிக்கும் வேலைதான் சாவர்க்கர் காட்டிய வழியின்படி ஒற்றை முகம் கொண்ட இந்திய வரலாற்றை வடிவமைக்கும் திட்டம்.

ஆர்.எஸ்.எஸ். - பா.ச.க.வின் இந்த "புதிய வரலாறு" எழுதும் திட்டம் வன்மையான கண்டனத்திற்குரியது! ஆனால், கண்டனம் செய்தால் மட்டும் போதாது! சமூக அறிவியல்படியான இந்தியாவின் உண்மை வரலாற்றை ஒவ்வொரு தேசிய இனத்தவரும் வெளிப்படையாகப் பேச வேண்டும். இந்தியா என்ற சொல்லும், நிர்வாகக் கட்டமைப்பும் பிரித்தானிய பீரங்கிகளால் உருவாக்கப் பட்டவை.

இன்றைய வடிவில் இந்தியா என்ற பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாடு இருந்ததே இல்லை! இந்தியத்தேச வரலாறு என்று எதுவுமில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேசங்களின் வரலாறுதான் இருக்கிறது என்பதை ஓங்கிச் சொல்வதுடன், அந்தந்த தேசிய இனமும் தனது சரியான புதிய இன வரலாற்றை எழுத வேண்டும்!

இந்தியாவின் பன்மையைக் குறிக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை "அரசுகளின் ஒன்றியம்" எனக் குறிப்பிடுகிறது; இந்தியாவை தேசம் (Nation) என்று கூறவில்லை. அரசமைப்புச் சட்டத்தையே முற்றிலும் கவிழ்க்கும் முயற்சியில் இறங்கியுள்ள பா.ச.க ஆட்சியாளர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க - இந்தியாவிலுள்ள அனைத்துத் தேசிய இனங் களைச் சேர்ந்தவர்களும், சனநாயக ஆற்றல்களும் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும்.

# பறிபோன இயற்கை

**சே. மணியரசன்**

நினைவுகளில் நெருடல்களாய்
நெருஞ்சிமுள் நினைவுகளாய்
நம்மிடமிருந்து பறிபோனது இயற்கை...

ஆற்றங்கரையில் அழகாய்
தலையசைத்த நாணல்
சேற்றுவயலில் வெட்கத்தில்
தலைகுனிந்த செந்நெல்
ஊற்றிலே நீர் இரைத்த நினைவு
காற்றோடு கதை பேசிய மரங்கள்
எல்லாம் ஞாபகத்தில் மட்டும் தான்
பொல்லாத ஞாலத்தில் இல்லை

ஆற்றோரம் நாம் கட்டிய மணல்வீடு
மணல் வீட்டின் வாசலிலே
சமைத்து வைத்த கூட்டாஞ்சோறு
பரிமாறும் பிஞ்சுவிரல்கள்
குளக்கரையோடு உறவாடிய
குளிர்ந்த நீர் அலைகள்
தூரத்து பனைமரத்து உயரத்தில்
பன்னாடையில் கூடு கட்டி
கண்சாடையில் கதை பேசும்
ஒரு சோடி தூக்கனாங்குருவி
எதையும் காணலயே எதனாலே?

உறவுகளை கூட இதயத்தில் தேடாமல்
இணையத்தில் தேட துணிந்தோம்
இணையவலைப் பின்னலால்
சிக்கித் தவிப்பது சிட்டுக்குருவி மட்டுமல்ல
காரிருள் இன்பத்துள் ஒளிந்திருக்கும்
ஆசைக்குக் கரையிடாத ஆறறிவு மனிதனும் தான்

தூர்வாரா அறிவும் கூட துயரத்தை
ஈட்டித் தரும் என மறந்தோமோ?
கூர் நோக்கும் கண்களை
குத்தகைக்கு விட்டோமோ?

ஏர் பிடித்த எழில் நிலமும்
துரு பிடித்து துடிதுடித்து
அழக் கண்டு ரசித்தோமோ?

மருத நிலம் அழுத நிலமாச்சே
என்ற பழிச்சொல் வேண்டாம்
இயற்கையை காக்கும்
துணிச்சல் வேண்டும்
எண்ணங்களில் புரிதல் வேண்டும்

மனத்தினை மறுவார்ப்பு
செய்யப் பழக்க வேண்டும்

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# பரவ செய்வீர் புத்தகங்களை!

## அறிவோம்! விரிவோம் உறவீர்!

பன்மை வெளி

## தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்



கற்பனை சிறகு விரிக்க...
கடல் கன்னி ரூ.50.00

பாடலோடு பயனும் அறிய...
சித்தர் பாடல்களும் சித்த மருத்துவமும் ரூ. 130.00

நம்மின்கலையறிய...
தமிழர் இசை - நாடகம் - திரைப்படம் ரூ.150.00

நம்மின் அறிவியல் அறிய...
தமிழர் அறிவியல் மரபு ரூ.100.00

வாழ்வையும் வாழ்விற்கான மருத்துவத்தையும் அறிய...
தமிழர் வாழ்வியலும் மருத்துவமும் ரூ.120.00

வாழ்வை வழிநடத்த...
பழமொழிகளும் வாழ்வியலும் ரூ.100.00

முன்னோர்கள் தண்ணீரை கையாண்ட மேன்மையறிய...
தமிழர் நீர் மேலாண்மை ரூ.100.00

பெரியோர் பெருமையறிய
தமிழ வள்ளலார் ரூ. 100.00


இருக்கும் வீட்டில் இயற்கை வேளாண்மை செய்ய...
மாடித் தோட்டம் ரூ. 50.00

பிள்ளை பாடல்களுக்கு...
மழையாட்டம் ரூ. 80.00

கல்வி திட்டங்களுக்கு பின்னுள்ள அரசியல் அறிய..
கல்வி அரசியல் ரூ. 150.00

நடந்தது - நடப்பது நடக்க வேண்டியதறிய...
சூழலியல் - அரசியல் - பொருளியல் ரூ. 150.00

மொழிகள் அறிய...
தமிழ்மொழித் தொன்மை ரூ. 125.00



மொத்த நூல்களின் விலை ரூ. 1405/-
கழிவு விலையில் ரூ.1000/- மட்டுமே

இன்னும்.. இன்னும்... இருக்கிறது
அறிய.. அறிய.. அது நம்மை விரிக்கிறது..!

பேச: 98408 48594, 99941 41416

MUTRAM - Tamil & English Monthly  RNI No. TNBIL/2010/36924.

